Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

ஆகஸ்ட் - 2023
நாடார் :13
முரசு :8



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:
15.3.1945

மறைவு:
15.7.2023



சிவசைலம் தெரு, தி.நகர், சென்னை.

தூத்துக்குடி மாவட்டம்- ஆறுமுகநேரி லேட்.என்.ஆர்.நாராயணன் நாடார் அவர்களின் மனைவி

## என்.ஜெயராமலட்சுமி (வயது-78)

15.7.2023 அன்று இயற்கை எய்தினார்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
அவரது பிரிவால் வாடும் N.R.N.குடும்பத்தினர்கள்.
9043012193.

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.து.நா.மகமை பரிபாலன சங்கம்.



தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**



இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்
டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுருஷோத்தமன்,M.A.,B.Ed



ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.



விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

A/c **No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**


# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!**



சுதந்திர போராட்டத்தில் நாடார் சமூகத்தின் பங்கு

இன்று நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றோம் என்றால் அதற்கு காரணம் அந்நிய அரசால் அடிபட்டு, சிறையில் வதைப்பட்டு, துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்கள் பல லட்சம் பேர் என்பதேயாகும். அந்த சுதந்திர வேள்வியில் நம்முடைய நாடார் சமூகத்தினரும் தங்களின் இன்னுயிரை ஈந்து வரலாறு படைத்துள்ளனர்.

பிரிட்டிஷ் அரசாங்கம், தன் வலிமையான ராணுவப் படையைக் கொண்டு, சுதந்திரப் போராட்டத்தை முறியடித்தனர். அவர்களுடைய கொடுமையான அடக்கு முறைகளும், சட்டத்திட்டங்களும் நம் மக்களை மிகவும் வாட்டி வதைத்தது. அதனால் நமது நாடார் சமூகத்தினர் வெள்ளையரை எதிர்த்து கிளர்ச்சி செய்து, தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தென் தமிழ் நாடாம் நெல்லைச் சீமையிலே வடலிவிளையில் ஒரு சிறந்த போர்வீரர் இருந்தார். அவரை மேனாட்டு போர்வீரர் "இராபின்வுட்"டை ஒப்பிட்டுப் பேசுவார்கள். அந்த அளவில் தைரியமும், போர்த்திறமையும் கொண்டவராக இருந்தவர்தான் செம்புலிங்க நாடார். பிரிட்டிஷ் ராணுவத்தை 30 ஆண்டுகள் மறைமுகமாக போரிட்டு, அலைய வைத்தார். மேலும், ஏழை எளியோருக்கு பகிரங்கமாக பகலில் சென்று இலவசமாக நலத்திட்ட உதவிகளைச் செய்தார். அவரது பெயர் தென்னாட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது சரித்திர உண்மையாகும்.

அடுத்து, சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர் அனந்த பத்மநாபன் நாடாரைப் பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். அவர் தன் 108 நாடார் களரி ஆசான்களோடு சென்று, ஆங்கிலேயரை வென்று பிரிட்டிஷ் ராணுவத்தினரைச் சிறைப் பிடித்தார். அந்த வீரச்செயலைப் பாராட்டி, மன்னர் மார்த்தாண்ட வர்மா அவர்கள் தான் எழுப்பிய வெற்றித்தூணில் அனந்த பத்மநாபன் நாடாரின் பெயரைப் பதித்துள்ளார். அத்தூண் குளச்சலில் இன்றும் புகழ்பாடிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, குலசேகரன் பட்டினத்து நிகழ்வை நம்மால் மறக்க முடியாது. மக்களை மிகவும் கொடுமையாக நடத்திய ஆங்கிலேய அதிகாரி லோன் துரையைச் சுட்டுக் கொன்று தூக்குமேடை ஏறிய நாடார் சமூகத்தைச் சேர்ந்த ராஜகோபால் நாடார், காசிராஜன் நாடார் அவர்களின் சுதந்திர வேட்கையைக் காலமெல்லாம் போற்றப்பட வேண்டியது நமது கடமையாகும்.

இமயம் முதல் குமரிவரை சுதந்திரப் போராட்டம்

கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் வேளையில், ஆங்கிலேயரை எதிர்த்து கிளர்ச்சி செய்து அவர் தலைமறைவாக வாழ்ந்து வந்தவர்தான் கேடி.கோசல்ராம் நாடார் அவர்கள். அந்த தியாகியைப், பார்த்த உடனே சுட்டு வீழ்த்தும்படி ஆங்கிலேயே அரசாங்கத்தால் உத்தரவு போடப்பட்டது. அத்தகைய தீரம் மிக்க வீரராக நம் நாடார் சமுதாயத்தின் பெருமைக்குக் காரணமாக விளங்கியவர் தான் இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகி கே.டி.கோசல்ராம் அவர்கள். இவர் தான் மணிமுத்தாறு அணையைக் கட்டிய பெருமைக்குரியவர்.

ஆறுமுகநேரி திரு.த.தங்கவேல் நாடார் ஒருவர் இருந்தார். அவரும் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர். அவர் தன் சொத்து முதலானவைகளை சுதந்திரப் போராட்டத்திற்காகச் செலவழித்ததோடு, அரசாங்கத்தில் வேலையாய் இருந்த அவர் தன் வேலையை ராஜினாமா செய்த தியாகச் செம்மல் நம் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகநேரி த.தங்கவேல் நாடாராகும். இன்னும், பெயர் குறிப்பிடாத பெருமக்கள், குறிப்பாக போற்றுதலுக்குரிய நேசமணி அய்யா சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள். மேற்குறிப்பிட்ட நாடார் சான்றோர் பெருமக்களை, நாம் நன்றியோடு நினைவு கூற வேண்டியது நமது கடமையாகும். நம் சமுதாயத்துக்கே உயரிய தலைவராக இருந்து வழிகாட்டிச் சென்ற கர்ம வீரர் காமராசர் அவர்களும் சுதந்திரத்திற்கு பாடுபட்ட பெருமகனார் ஆவார்.

பெருந்தலைவர் என்றும், "கல்விக்கண் தந்த தந்தை" என்றும், மக்கள் தலைவர் என்றும், சமுதாய சிற்பி என்றும் போற்றப்படுகின்றவர் நம் தலைவர். நாடார் சமூகத்தின் காவலர் அவரது, இளமைக்கால வாழ்க்கையை இந்திய சுதந்திர போராட்டத்திலே கழித்தார் என்பது பலருக்குத் தெரியாது. பெருந்தலைவர் தனது பதினாறு வயதிலேயே சுதந்திர போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினார். அவரது சுதந்திர போராட்ட காலங்களில் அவர் சிறைவாசம் சென்ற நாட்கள் சுமார் 3000 நாட்களாகும். அவரது சுதந்திர போராட்டம் இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும்.

இந்த சுதந்திர நன்நாளில் இரத்தம் சிந்தி, பெற்ற சுதந்திரத்தைப் பேணி காப்பது நம் கடமையாகும்.

வாழ்க பாரதம்! வாழ்க தமிழ்த் திருநாடு!

**கலைமாமணி, செவாலியர் திருவள்ளுவர் தூதுவர் டாக்டர். வி.ஜி.சந்தோசம் அவர்கள்.**

# மார்ஷல் A.நேசமணி நாடார்



Marshal A Nesamony Birthday 12-06-1895
ஏ நேசமணி

3. பெஞ்ச் கிளர்க் பரமசிவம் வந்து அவர் அருகே குனிந்து நாடார்கள் முக்காலிகளில் உட்காரலாம், அதுதான் வழக்கம். எம்.கெ.செல்லப்பன் கூட இன்று வரை நாற்காலியில் அமர்ந்ததில்லை. என்கிற விஷயத்தைச் சொன்னார். ஒரு நிமிடத்தில் ரத்தமெல்லாம் தலைக்கு ஏற, நேசமணி எழுந்து கத்த ஆரம்பித்தார். "லே இங்கு பாவப்பெட்டவனுக்கு இருக்க இடமில்லேண்ணா, பின்ன நீதி எங்கலே கிட்டும்? நாயிப்பயலுவளே". என்று கூறியபடி முக்காலிகளைத் தூக்கி கொண்டு வந்து நீதிமன்ற முற்றத்தில் வீசினார். ஒவ்வொரு அறையாகப் போய் முக்காலிகளைத் தூக்கி கொண்டு வந்து வீசிக்கொண்டே இருந்தார். கறுத்தான் என்னும் இளைஞன் அம்புரோஸ் டீ கடையில் வேலைபார்க்கும் பையன், அம்புரோஸ் டீக்கடையில் அந்த கறுத்தான் இருக்கும்போது ஒரு வக்கீல் குமாஸ்தா ஓடி வந்து அந்த பள்ளியாடிப் பையன் "அங்க விளகி நிக்கான், தலைக்குச் சுகமில்லாத பயலாக்கும் என்றார். இன்னும் பலர் ஓடிவந்தார்கள். கொலை நடக்கப்போகிறது என்றார்கள். பள்ளியாடிப் பெருவட்டருக்கு மவனாக்கும் மரியாதை அறியாதவன். இளவயசல்லா, என்று ஒரு கிழவர் சொன்னார். கொஞ்ச நேரத்தில் சட்டையெல்லாம் கலைந்திருக்க வியர்த்து மூச்சிரைத்து, நேசமணி வந்து சேர்ந்தார். "சாய எடுலே" என்று அதட்டினார். கறுத்தான் டீயைக் கொடுத்ததும், ஒரே மிடறில் உள்ளே இழுத்துவிட்டு, காசை அப்படியே வீசியப்படியே போட்டுவிட்டு கிளம்பிச் சென்றார்.

4. கொஞ்ச நேரத்தில் வெள்ளமடம் பகுதியைச் சேர்ந்த இருபத்துக்கும் மேற்பட்ட ரௌடிகள் கையில் கம்புகளுடன் டீக்கடைக்கு வந்து நேசமணியைத் தேடினார்கள். கத்தானை இழுத்து நிறுத்தி அவரைப் பற்றி கேட்டு மிரட்டினார்கள். நாகர்கோவில் முழுக்க அவர்கள் அவரைத் தேடி அலைந்தார்கள். அன்று நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. நகர் முழுக்க இதுவே பேச்சாக இருந்தது. வெள்ளமடம் பயக்களாக்கும்லே வெட்டும் கொலையும் அவனுகளுக்கு வெளையாட்டாக்கும் என்றார்கள். ஒரு நல்ல கொலை நகரில் நடந்து நெடு நாட்களாயிற்று என்றார்கள்.

# பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம்

-அருட்பணிசெம்மல் S.V.சிவசம்பந்த நாடார்,
தஞ்சை(வ) மாவட்ட அவைத்தலைவர்,
பெருந்தலைவர் மக்கள் கட்சி,
கும்பகோணம், 9245344808.

கோயம்புத்தூரில் இருந்து மேற்கு திசையில் சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது பேரூர் எனும் பாடல் பெற்ற சிவாலயம்.

நால்வரால் பாடல் பெற்ற இத்தலம் மேல சிதம்பரம் என்றும் அழைக்கப்படுகிறது. இக்கேயிலில் முக்கியமாக ஐந்து அதிசயங்கள் இன்றவும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது.

1.இறவாத பனைமரம் பல ஆண்டுகாலமாக பசுமை மாறாமல் இளமையாகவே இருந்து வருகிறது. இந்த மரத்திற்கு இறப்பு என்பது எப்போதுமே கிடையாதாம். இந்த மரத்தின் பட்டையை இடித்து கசாயம் போட்டுக் குடித்தால் தீராத வியாதியெல்லாம் தீரும் என்கிறார்கள். இதனால் தான் இப்பனை மரத்தினை இறாப்பனை என்றும் மக்கள் அழைக்கிறார்கள்.

2. அடுத்தது பிறவாத புளி என்று போற்றப்படும் புளிய மரமாகும். இப்புளிய மரத்தின் விதைகள் மீண்டும் முளைப்பதே இல்லையாம். பல அன்பர்கள் பல்வேறு வழிகளிலும் முயற்சி செய்து இம்மர விதையினை முளைக்கச் செய்ய ஆவன செய்தும் முளைக்கவே இல்லை என ஆச்சரியத்துடன் கூறுகின்றார்கள். இதன் காரணமாகவே இதனை பிறவாத புளி என அழைக்கின்றார்கள்.

3.கோயில் இருக்கின்ற பேரூர் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் சாணம் மண்ணில் கிடந்தால் எத்தனை நாட்கள் ஆனாலும் அவற்றிலிருந்து புழுக்களே உண்டாவதில்லையென அறியலாம் இன்றளவும் இது இங்கு முக்கிய நிகழ்வாகவே கருதப்படுகிறது.

4.இங்கு வசிக்கும் மக்களில் யாரேனும் இறந்துவிட்டால் அவர்களது உடலை எரித்த பிறகு அவற்றில் உள்ள எலும்புகளை இங்குள்ள நொய்யல் ஆற்றில் விடுவார்களாம். அவ்வாறு ஆற்றில் விடப்பட்ட எலும்புகள் அனைத்தும் சிறிது காலத்தில் கற்களாக உருமாறி கண்டெடுக்கப்படுகிற நிலை உருவாகி விடுவதாக எடுத்துக் கூறுகின்றார்கள்.



5. பேரூரில் மரணம் அடையும் மனிதனின் வலது காது மேல் நோக்கி வைத்தபடி தான் இருக்கிறது. இந்த அதிசயம் இன்றளவும் இங்கு நடந்து கொண்டே இருப்பது மிகுந்த ஆச்சரியத்தையே ஏற்படுத்துகின்றது. இந்த அதிசயங்களை நடத்திக் கொண்டு இருக்கும் பட்டீஸ்வரர் அமைதியாகவே காட்சி அளிக்கிறார் இங்கு வந்து பசுமாடுகள் எல்லாம் மேய்ந்து கொண்டு இருக்கும் பொழுது தினமும் ஒரு பசுமாடு மட்டும் அருகிலுள்ள புற்றின் மீது பாலை சொறியுமாம். இதனைப்பார்த்த மாடு மேய்ப்பவன் ஊர்ப்பெரியவர்களிடம் எடுத்துச் சொல்ல, அவர்கள் அந்த இடத்தை தோண்டும் பொழுது கிடைத்தவரே இந்த பட்டீஸ்வரர் பெருமான் ஆவார். இவரது திருமேனியில் தலையில் ஐந்து தலை நாகம் படமெடுத்தநிலை, மார்பில் பாம்பின் பூணூல், தலையில் அழகாய் சடைக்கொத்துக்கள், சடையின் நடுவில் கங்கை மற்றும் அன்னமும், பன்றியுமாய் பிரம்மா - விஷ்ணு அடி முடி தேடிய அடையாளங்கள் உள்ளன. மேலும் பட்டீஸ்வரர் தலையில் மாட்டின் கால் தழும்புகள் மற்றும் கொம்பு முட்டிய தழும்புகளும் உள்ளன. இவர் இருக்கும் பின்புறம் பன்னீர் மரங்கள், பன்னீர் பூக்களைச் சொறிந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் இக்கோயிலின் தலவிருட்சம் அரசமரமே ஆகும்.




**நாடார் மஹாஜன கிளைச் சங்கம், வேலூர், 126/45ஏ, ஜப்பார் தோப்பு, நல்லான்பட்டரை, சின்னதெரு, வேலூர்-632001.**

வேலூர் நாடார் மஹாஜன கிளைச் சங்கத்தின் சார்பில் 15.7.2023 அன்று பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்னாரது திருஉருவ சிலைக்கு சங்கத்தலைவர் திரு.எஸ்.ஜெயச்சந்திர பாக்கியராஜ், துணைத்தலைவர்கள் திரு.என்.தங்கவேல் மற்றும் திரு.பி.கலியமூர்த்தி செயலாளர் திரு.கே.சாலமோன், இணைச்செயலாளர் திரு.எஸ்.சாமுவேல் வசந்தராஜ் ஆகியோர் மாலை அணிவித்தனர். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் திரு.ஏ.பொன்ராஜ், திரு.எம்.டேவிட் முருகேசன், திரு.டி.பாஸ்கர் அந்தோணி பிச்சை, திரு.டி.ஜெபஸ்டின், திரு.டி.மணிகண்டன், திரு.ராபர்ட், திரு.என்.ஜெயதங்கதுரை, திரு.எம்.ராஜீவ்காந்தி, திரு.ஜி.பாலமுருகன், திரு.சி.டி.பூபதி, திரு.கனகராஜ், திரு.வடிவேலு, திரு.எஸ்.டொமினிகி சேவியோ ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மேனேஜர் திரு.சதீஷ்குமார் உதவி மேனேஜர் திரு.முத்துகுமார் மற்றும் வங்கி ஊழியர்கள் திரு.சௌந்தரராஜன் மற்றும் திரு.ஜெயப்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பெற்றன.



எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

# அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

# அடையார் முருகன் டிராவல்ஸ்

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்: த.பரமசிவன்

24 மணி நேர சேவை

---

P.R. Dinakaran ஸ்ரீவனங்காத்த பார்வதி அம்மன் துணை Ph: 044-2440 1255 Mobile: 9884447771



# THIYAGARAJAN Bros

Waste Paper & LED, LCD T.V, Lap Top, All Computer Items, Mobile Phones, A/C.Refrigrator, Washing Machine, All Metals & All kinds of Scrap Dealers

New No:20, 2nd Cross Street, Kasthuribai Nagar, Adyar, Chennai-20.

---



உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

# பேபி. புரோட்டீன்ஸ்

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**

---

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

# ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி

9789427171
7397152711

# வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

# ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.

---



# REVATHI LABEL PRINTERS

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumables, & Software Support.**

2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.
Emaill: dhevi_rlp@yahoo.co.in




# ஆர்.சித்தர்ராஜ் நாடார்

## குட்வில் ரியல் எஸ்டேட்

136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



# JEHOVAH

## GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares
E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

C.மதியழகன்
செல்:9789095625.

வாழ்க வளமுடன்

# ஸ்ரீ கணேஷ் பவன்

SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.




# முதுமையில்...... இனிமை..................



புலவர் சண்முகம் அவர்கள் புதிய தொடர்கதை.

இவர் கொங்கு மண்ணில் வசித்த காலத்தில் அங்குள்ள நாடார்களைப் பற்றி ஆய்வு செய்து "கொங்கு நாடார் வரலாறு" என்றப் புத்தகத்தை 1978ஆம் ஆண்டு நாடார் மகாஜன சங்கத்தின் மூலமாகப் பதிப்பித்தார். இந்த புத்தகம் இன்று எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இந்தப் புத்தகம் யாருக்காவது கிடைத்தால் நாடார் முரசு ஆசிரியரை தொடர்பு கொண்டு தெரிவியுங்கள். சண்முகம் அவர்களுக்கு ஆறுமுகநேரி ஊரைச் சேர்ந்த "அறிவுக்கடல்" எஸ்.ஏ.இராமச்சந்திர டோகோ அவர்களோடு நல்ல தொடர்பு இருந்தது. இதன் காரணமாக டோகோ அவர்கள் நாடார் குல தீபம் பத்திரிகையில் சில வருடங்கள் நாடார் திருமண சடங்குகள் என்ற தலைப்பில் தொடராக எழுதி வந்தார். பின்னர், இத் தொடர்கள் யாவும் சில கூடுதல் விவரங்கள் சேர்க்கப்பட்டு நாடார் திருமண சடங்குகள் என்றப் பெயரில் வெளியிடப்பட்டது. சண்முகம் அவர்கள் எழுதிய "கர்மவீரர் காமராஜர் வரலாறு" எனும் நூல் தமிழ்நாடு நூலகத் துறையால் தேர்வு செய்யப்பட்டு நூல் நிலையங்களில் இடம்பெற்றது. இது தவிர, "இந்துக் கோயில்கள் அரசு வசமே இருக்க வேண்டும்" எனும் இன்னொரு நூலையும் இவர் எழுதியுள்ளார்.

தமிழில் பிறமொழி சொற்கள் கலப்பதை தவிர்க்கவேண்டுமென்ற கொள்கையுடைய இவர் இதனை வலியுறுத்தும் பொருட்டு தனது எண்ணங்களையும், கருத்துகளையும் தன் நாடார் குல தீபம் இதழ்கள் மூலம் பரப்பி வந்தார். இவர் செந்தமிழ் கவிஞர், செய்யுள் இயற்றும் திறனுடையவர். காமராஜர் பாமாலை, 8ஏ நேமணி என்ற சிறிய கவிதை நூல்கள் இயற்றி வெளியிட்டு, மேடைகளில் இசையோடு பாடியவர், தமிழ்மொழியை செம்மொழியாகக் வேண்டுமென்று நாகர்கோவில், புதுக்கோட்டை தமிழ் அமைப்புகள் நடத்திய போராட்டங்களில் பன்முறை கலந்து கொண்டுள்ளார். திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் இருவர்களிடமிருந்து 3முறை திருமுறைச் செல்வர் என்ற பட்டம் பெற்றுள்ளார். இவ்வாறாக தமிழ் சமுதாயத்திற்கு இவர் செய்த தொண்டுகளும் அளப்பரியது.

புலவர் சண்முகம் அவர்கள் தன்னுடைய முதுமைப் பருவம் வரையிலும் நாடார் குல தீபம் மூலமாக தன் சமுதாயப் பணியை நேர்த்தியாக செய்தார். தற்போது சில ஆண்டுகளாகத் தான் தன்னுடைய உடல்நிலை காரணமாக சமுதாயப் பணியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டுள்ளார். தற்போது இவருக்கு வயது 86 ஆகிறது. சண்முகம் அவர்கள் தன்னுடைய பெரும்பாலான நாட்களை கொங்கு மண்ணிலேயும் நாடார் சமுதாயத்திற்காகவும் அர்ப்பணிப்போடும் உற்சாகமாகவும் கழித்தாக நினைவு கூறுகிறார் இவரது மனைவி பால்தங்கம். இவருக்கு 4ஆண் பிள்ளைகளும் 2 பெண் பிள்ளைகளும் உள்ளார்கள். இவரது சமுதாயப் பணியின் காரணமாக குடும்பத்தில் வறுமை ஏற்பட்டு இவரது பிள்ளைகள் மிகுந்த உழைப்பை செலுத்தியே தற்போது வாழ்க்கையில் வெற்றி பெற்றுள்ளனர். மிகுந்த கவித்திறன் மற்றும் நினைவாற்றலைக் கொண்ட புலவர் சண்முகம் அவர்கள் தற்போது தன் உடல்நிலை பாதிப்பு காரணமாக தன் மகன்களின் அரவணைப்பில் அமைதியாக தான் பிறந்த கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்.

ஆசிரியர்.மா.திருப்பதி வெங்கடேஸ்
8760967532.

7 லட்சம் திருமணங்களை
இனிதே நிறைவேற்றிய

வெற்றி
# வெற்றி
# திருமண மையம்

## பதிவு கட்டணம் இலவசம்

காலை 10 to இரவு 8 மணிவரை
எல்லா நாட்களும்

அனைத்து இனத்தவருக்கும்
லட்சகணக்கான வரன்கள் உள்ளன

புரோக்கர் கமிஷன் கிடையாது

இலவச ONLINE பதிவிற்கு
www.vetrimatrimony.com

பிளாட் நம்பர் 5, லேக் ஏரியா,
மாட்டுத்தாவணி பஸ் நிலையம் அருகில்,
மதுரை - 625 107.

73971 13833, 73970 43396
73970 94709, 73971 52597

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

## மூட்டு, எலும்புகளின் நலம்

**கேள்வி:**

தங்கள் அறக்கட்டளை மூலம் முதுமை எனும் பூங்காற்று இதழை எங்கள் இல்லத்திற்கு அனுப்பி வைத்தமைக்கு மிக்க நன்றி. எங்கள் சர்வாலயம் முதியோர் மற்றும் சிறுமியர் நல இல்லத்தில் 40 பெரியவர்களுக்கும் பயனுள்ள குறிப்புகள் இடம் பெற்றிருந்தது. எங்களைப் போன்ற இல்லம் நடத்துபவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு பத்திரிகையை நடத்தும் தங்களுக்கு இல்லத்தில் உள்ள பெரியவர்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இங்குள்ள பெரியவர்களுக்கு அதிகமாக முழங்கால் வலி, கால் வலி மற்றும் உடல் வலி என்று கூறுகின்றனர்.

இதற்காகப் பின்பற்ற வேண்டிய உணவு முறை மற்றும் சிகிச்சை பற்றி கூற வேண்டுகிறோம்.

**பதில்:**

எங்களின் மாத இதழ் உங்களின் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு பயனுள்ள வகையில் இருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி. உங்கள் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு முழங்கால் வலி வருவதற்கு முக்கிய காரணம் அனேகமாக முதுமையின் விளைவாக இருக்கலாம். அதற்கு எலும்பியல் நிபுணர் ஆலோசனையை பெறவும். இதைத் தவிர கால் வலி மற்றும் உடல் வலி போன்ற தொல்லைகள் உடலில் வைட்டமின் டி குறைவாக இருப்பதினாலும் இருக்கலாம். வைட்டமின் டி முக்கியமாக சூரிய ஒளியிலிருந்து கிடைக்கிறது. முதியோர் இல்லங்களில் உள்ள முதியவர்கள் அதிக நேரம் இல்லங்களிலேயே முடங்கி கிடப்பதால் சூரிய ஒளியிலிருந்து கிடைக்கும் வைட்டமின் டி இல்லாமல் போய்விடுகிறது. ஆகையால், நடக்க முடிந்தவர்கள் தினமும் காலையில் மற்றும் மாலையில் அரை மணி நேரம் வெளியில் நடக்கவும். முடியாதவர்களுக்கு வெயிலில் இருக்கை அமர்த்தி காலையில் மற்றும் மாலையில் அரை மணி நேரம் இருக்குமாறு செய்யவும் இத்துடன் முடிந்த வைட்டமின் டி அதிகமுள்ள பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட முறையை சுமார் 3 மாத செயல்படுத்தி பாருங்கள். அதற்கு பின்பு அவர்கள் வலி குறையவில்லையென்றால் வைட்டமின் டி3 ரத்தப் பரிசோதனை செய்து பின்பு அதற்குண்டான மாத்திரையை எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கும்.

**கேள்வி:**

எனக்கு வயசு 81 ஆகிறது. இரண்டு முழங்கால் மூட்டிலும் வலி டாக்டர். இதற்கு ஆபரேஷன் தான் செய்யவேண்டும் என்றார். எனக்கு அதில் விருப்பமில்லை. அதற்கு மாறாக மூட்டிற்குள்ளேயே ஊசி போட்டால் சிறிது காலம் வலியில்லாமல் இருக்கும் என்றார். உங்கள் பதில் என்ன? நான் மூட்டிற்குள்ளேயே ஊசியைப் போட்டுக் கொள்ளலாமா? இதனால் பக்கவிளைவுகள் ஏதாவது ஏற்படுமா?

**பதில்:**

முழங்கால் மூட்டுவலி உள்ள சிலருக்கு மூட்டிற்குள்ளேயே ஊசி மூலம் ஸ்டீராய்டு மருந்தினைச் செலுத்தினால் நல்ல பயன் கிடைக்கும். ஆனால் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் மூட்டுகளில் ஊசி போட்டுக் கொள்ளக் கூடாது. தாங்கமுடியாத மூட்டு வலி உள்ளவர்களுக்கும், அறுவை சிகிச்சைக்கு விருப்பம் இல்லாதவர்களுக்கும் மற்றும் அறுவை சிகிச்சைக்கு தகுதி இல்லாதவர்களுக்கும் இச்சிகிச்சை முறை உகந்தது. இந்த சிகிச்சை முறையினால் 1-2 ஆண்டுகளுக்கு மூட்டு வலி இல்லாமல் இருக்கலாம். மறுபடியும் வலி வரலாம். எதற்கும் இதோடு இயன்முறை சிகிச்சையையும் (பிசியொதெரபி) எடுத்துக்கொள்ளுங்கள். மூட்டு வலி நன்றாகவே குறையும்.

**கேள்வி:**

வயதான காலத்தில் ஏற்படும் முழங்கால் மூட்டுவலியை பூரணமாகக் குணப்படுத்த முடியுமா? அதற்கு ஏற்ற சிகிச்சை முறை எது?

**பதில்:**

ஆரம்ப நிலையில் உள்ள மூட்டுத் தேய்மானத்தினால் ஏற்படும் வலியை உடற்பருமனை குறைத்தல், தவறாமல் உடற்பயிற்சி செய்தல், ஆஸ்பிரின் போன்ற வலி நிவாரணி மாத்திகைளை எடுத்துக் கொள்ளுதல் மற்றும் இயன்முறை சிகிச்சை முறை மூலம் ஓரளவுக்கு குறைக்க முடியும். அறுவை சிகிச்சைக்கு விருப்பம் இல்லாதவர்கள் அல்லது சிறிது காலத்திற்கு அறுவை சிகிச்சையை தள்ளிப்போடுவதற்கு புதிய சிகிச்சை முறைகளான மூட்டுக்குள்ளேயே ஊசி மூலம் ஸ்டிராய்டு மருந்தைச் செலுத்துவது, ஸ்டெம்செல் சிகிச்சை முறை மற்றும் பிலேட்லெட் செல் சிகிச்சைகள் மூலம் ஒரு சில ஆண்டுகளுக்கு வலி இல்லாமல் இருக்கலாம். அறுவை சிகிச்சைகளான தேய்ந்த மூட்டின் ஒரு பகுதியை மட்டிலும் அகற்றிவிட்டு செயற்கை மூட்டின் ஒரு பகுதியை மட்டும் பொறுத்துவது அல்லது முற்றிலுமாக செயற்கை மூட்டை பொறுத்துதல் மூலம் பூரண நலம் பெறலாம். அறுவை சிகிச்சை செய்து கொண்ட சுமார் 90% முதியவர்கள் 10-15 ஆண்டுகள் (சிலருக்கு வாழ்நாள் முழுவதும்) வலியின்றி வாழலாம்.

**தொகுப்பு: - எல்மாமதி..**





V.முருகானந்தம்

தலைவர்-138வது வட்டம்

விருகை தெற்கு பகுதி

காங்கிரஸ் கமிட்டி



எண்:42, அண்ணா மெயின் ரோடு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78,9840583539.



செல்: 98405 57997, 98415 49955

V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87



# PTN திருமண தகவல் நிலையம்

நோயாளிகள் மற்றும் உடல்நலம் சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்களுக்கான பிரத்யேக திருமண தகவல் நிலையம் பொருத்தமான வரன் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

குமார் செல்: 90437 44793

எண். 3, எழில் நகர், சேலையூர், சென்னை -73

SSS

Cell:9884687675, 9488491671.

அய்யா துணை



## திருமண தகவல் மையம்

அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.


# நாடார் மறுமலர்ச்சி

**நாடார்களுக்கு எதிரான கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொள்ளையர்கள்**

ஜூன் 2இல் ஏற்பட்ட இந்த கலவரத்தில் 2 பிள்ளைமார் மாண்டனர். அன்று, வத்தராயிருப்பில் புதுப்பட்டியின் ரோமன் கத்தோலிக்க மதகுரு, புதுப்பட்டியைக் கொள்ளையிட மற்ற ஜாதியினர் முடிவெடுத்திருப்பதாகக் கூறிய புகாரின் பேரில், 2 போலீஸார் வந்தனர். அங்கு, அன்று கலவரம் எழவில்லை. ஆனால், பக்கத்தில் லட்சுமிநாராயணபுரத்தில் 36 நாடார் குடிசைகளை எரித்து, 12 நாடார்களைக் காயப்படுத்தினர். மேலக் கோபாலபுரத்தில் நாடார்களைக் கொள்ளையிடத் திட்டமிட்டதையறிந்து, போலீஸ் வந்து, 5 பேரை கைது செய்து, கலவரத்தைத் தடுத்தனர்.

ஶ்ரீவில்லிபுத்தூரில் போலீஸ் இன்ஸ்பெக்டர், கரிசல் குளத்தில் நாடார்களுக்கு எதிரான கொள்ளையும், கொலையும் நடக்கின்றன என்றும், மற்ற ஜாதியினர் நாடார்கள் மீது மிகவும் பகையுணர்வு கொண்டுள்ளனர் என்றும், சிவகாசி மற்றும் சுற்றுக் கிராமங்களில் பாதுகாப்பு போதவில்லை என்றும் கூறி, அதிக போலீஸ் அனுப்பக்கோரி மாவட்ட போலீஸ் அதிகாரிக்கும், மாவட்ட மாஜிஸ்ரேட்டுக்கும் விண்ணப்பித்தார். கரிசல்குளத்துக்கு வந்த அவர், ஆயுதங்களுடன் 500 மறவர், தாழ்த்தப்பட்டோர் முதலானோர் நாடார்களைக் கொள்ளையிடக் காத்திருப்பதாகவும், அவர்களைத் தடுக்க தன்னிடம் போலீஸ் போதவில்லை என்றும் கூறி, உடனே படை அனுப்பக்கோரி மாவட்ட மாஜிஸ்ரேட்டுக்கு அவர் தந்தியும் கொடுத்தார். கூனூரைப் பார்வையிட்டார். எல்லா ஊர்களிலும் நாடார்களுக்கு எதிரான கொள்ளை, கொலை சூழ்நிலை உருவாகியிருப்பதை அறிந்தார். பல கிராமங்களில் நாடார்களை மறவர்கள் கொள்ளையிட்டு, வீடு சொத்துக்களை அழித்ததாகவும், துலுக்கப்பட்டியிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் கிறிஸ்தவ ஆலயம் முதலான பல கட்டிடங்களை எரித்ததாகவும், ஜி.எஸ்.பிரைஸ் என்ற மதகுரு, ஸ்காட் என்ற ஆங்கிலேய அதிகாரிக்கு ஜூன் 4ல் புகார் கொடுத்தார்.

**சிவகாசிக் கொள்ளைக்கு நாள்குறிப்பு**

1899 ஜூன் 6, செவ்வாய்க் கிழமையில் சிவகாசி நாடார்களின் வீடுகள், கடைகள், சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்படும் என்று சுவரொட்டிகளும், துண்டு பிரசுரங்களும் அச்சிட்டு, கோவில் கதவுகளிலும், சுவர்களிலும் பகிரங்கமாக பல நாட்களுக்கு முன் கூட்டியே மற்ற ஜாதியினர் ஒட்டினர். அந்த நாள் நெருங்க நெருங்க சுற்றுக்கிராமங்களில் அதற்கான ஒத்திகையாகப் பல நாடார்களைக் கொள்ளையிட்டனர். பல பகுதிகளிலிருந்து சிவகாசி நோக்கி கொள்ளையர்கள் படையெடுத்தனர். சாத்தூரின் துணை மாஜிஸ்ரேட், சிவகாசியில் பீதி நிலவுகிறது. வியாபாரம் இல்லை. பலர் ஊரை விட்டு ஓடுகிறார்கள் என்று ஜூன் 1ல் தெரிவித்தார்.

**சிவகாசிக் கொள்ளையைத் தடுக்க நாடார்களின் முயற்சி**

மே 26ல் சிதம்பர நாடார், வள்ளியப்ப நாடார், மாரியப்ப நாடார், ஆறுமுக நாடார் ஆகியோர், மானசேரி தாலுக்காவுக்குச் சென்று மற்ற ஜாதித் தலைவர்களுடன் பேசி, கொள்ளையைத் தடுத்திட முயன்றனர். மறவர் தலைவரான, நாகப்பத் தலைவர், வெள்ளையத் தேவர், ஆறுமுகம் பிள்ளை ஆகியோர், நாடார்கள் பல்லக்கில் ஏறக்கூடாது, கோவிலுக்குள் நுழையக்கூடாது என்றும், மறவர் நிதிக்கு ரூ.10,000 கொடுக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தனர். பேச்சுவார்த்தைக்குச் சென்ற நாடார்கள், வருமான வரியாக மறவர்களுக்கு ரூ.13,000க்கு மேல் கொடுக்க முன்வந்தனர். நாடார்களை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட மற்றவர்கள், அதை ஏற்க மறுத்து, பேச்சு வார்த்தையை முறித்து விட்டனர்.

கிறிஸ்தவ நாடார்களும் சிவகாசிக் கொள்ளையைத் தடுக்கப் பேச்சுவார்த்தை நடத்தினர். சிவகாசிக்கு அருகிலுள்ள சச்சியபுரத்தின் கிறிஸ்தவ நாடார்கள், மே 26ல் நடுவப்பட்டி வெள்ளையத் தேவரைச் சந்தித்து கிறிஸ்தவ நாடார்களைத் துன்புறுத்த வேண்டாமென்று கோரினர். இதுவும் தோல்வியடைந்தது. ஶ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவின் வடக்கில், மற்ற ஜாதியினர் பல பகுதிகளில் இருந்து வந்து குவிந்தனர். இவர்கள், மே மாதத்தில் அங்கு நிறையக் கொள்ளையிட்டனர். நிதி திரட்டினர். சிவகாசியை அழிப்பதற்கான திட்டத்தை இங்கு அவர்கள் தீட்டினர். இதுபற்றி ஶ்ரீவில்லிபுத்தூரின் துணை மாஜிஸ்ரேட்டும், குருமார்களும், நாடார்களும் ஜூன் 5ல் தந்தி மேல் தந்தியாக, மாவட்டப் போலீஸ் அதிகாரிக்கும் மாவட்ட மாஜிஸ்ரேட் ஸ்காட்டுக்கும் அனுப்பி, பாதுகாப்பு வேண்டினர். ஆனால், அதிகாரிகள் செவிடன் காதில் ஊதிய சங்கு போல, அமைதியாக இருந்தனர். பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது நன்றாகத் தெரியும். (தொடரும்)

# ஆகஸ்ட் மாதம் மறக்கமுடியாத பிரபலமானவர்கள்

- தொகுத்து வழுங்கியவர். காமராஜர் தொண்டர் சூளைமேடு த.ராமச்சந்திரன் செல்:9384533221.

❖ 1920ஆகஸ்ட் 1ல் தலைவர் பாலகங்காதர திலகர் நினைவு நாள்
❖ 1984 ஆகஸ்ட் 1ல் எனது இளைய மருமகன் எஸ்.கணேஷ் பிறந்த நன்நாள்.
❖ 1984 ஆகஸ்ட் 2ல் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விடுதலைபுலி பாவிகள் வெடிகுண்டு வைத்து வெடிக்க செய்து 30 பேர் மரணம், பலர் காயம்.
❖ 1900 ஆகஸ்ட் 4 ல் இங்கிலாந்து ராணி எலிசபெத் பிறந்தார்.
❖ 1927 ஆகஸ்ட் 4ல் நடிகர் சந்திரபாபு தூத்துக்குடியில் பிறந்தார்.
❖ 1947 ஆகஸ்ட் 5ல் சரவணபவன் ஓட்டல் ராஜகோபால் பிறந்த நாள்.
❖ 1905 ஆகஸ்ட் 5ல் ராஜா முத்தையா செட்டியார் பிறந்த நாள்.
❖ 1941 ஆகஸ்ட் 6ல் தேசபக்தர் அரவிந்தர். வந்தே மாதரம் என பத்திரிக்கை ஆரம்பித்தார்.
❖ 1918 ஆகஸ்ட் 7ல் டாக்டர் கருணாநிதி அவர்கள் நினைவு நாள்.
❖ 2018 ஆகஸ்ட் 8ல் அன்பரசு காங்கிரஸ் எம்.பி.நினைவு நாள்.
❖ 2016 ஆகஸ்ட் 9ல் கவிஞர் பஞ்சுஅருணாசலம் நடிகை ஜோதிலட்சுமி ஆகியோர் நினைவு நாள்.
❖ 2010 ஆகஸ்ட் 8ல் என் அண்ணன் நாலுமாவடி ஆர்.எஸ்.பாண்டியன் மாரடைப்பால் சென்னையில் காலமானார்.
❖ 1942 ஆகஸ்ட் 9ல் வெள்ளையனே வெளியேறு என இறுதிகட்ட போராட்டம் நாடெங்கும் சூடுபிடித்தது.
❖ 1977 ஆகஸ்ட் 9ல் எனது மருமகள் முத்துலட்சுமி செந்தில் 47ம் பிறந்த நாள்.
❖ 1942 ஆகஸ்ட் 10ல் முரசொலி இதழ் வெளியிடப்பட்டநாள்.
❖ 2011 ஆகஸ்ட் 10ல் மூலக்கரை என் அத்தை வி.ஆர்.செவந்திகனி 92வயதில் காலமானார்.
❖ 1894 ஆகஸ்ட் 10ல் முன்னாள் ஜனாதிபதி வி.வி.கிரி பிறந்த நன்நாள்.
❖ 1979 ஆகஸ்ட் 12ல் ஏ.வி.மெய்யப்ப செட்டியார் நினைவு நாள்.
❖ 2013 ஆகஸ்ட் 12ல் தியாகி ஆறுமுகநேரி ஆண்டியப்ப நாடார் நினைவு நாள்.
❖ 1865 ஆகஸ்ட் 14ல் ஆபிரகாம்லிங்கம் அவர்கள் நினைவு நாள்.
❖ 1872 ஆகஸ்ட் 15ல் தேசபக்தர் அரவிந்தர் பிறந்த பொன்நாள்.
❖ 1941 ஆகஸ்ட் 15ல் எனது சகோதரி பி.லிலாபாப்பா 83வது பிறந்த நாள்.
❖ 2010 ஆகஸ்ட் 16ல் எனது மூலக்கரை மாமன் ஆதி-ராமசாமி நினைவு நாள்.
❖ 2018 அகஸ்ட் 16ல் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் நினைவு நாள்.
❖ 1890 ஆகஸ்ட் 18ல் நேருஜி தங்கை விஜயலட்சுமி பண்டிட் பிறந்த நாள்.
❖ 1931 ஆகஸ்ட் 19ல் என் தலைவர் ஜி.கே.மூப்பனார் அவர்கள் 93வது பிறந்தநாள்.
❖ இதே ஆகஸ்ட் 19ல் ஐயா தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் பிறந்த நாள்.
❖ 1944 ஆகஸ்ட் 20ல் மறைந்த தலைவர் ராஜீவ்காந்தி 80வது பிறந்த நாள்.
❖ 1907 ஆகஸ்ட் 21ல் ஜீவானந்தம் அவர்கள் நாகர்கோவில் அருகிலுள்ள பூதம்பாண்டி என்ற ஊரில் பிறந்தார்.
❖ 1914 ஆகஸ்ட் 23ல் நடிகர் டி.எஸ்.பாலையா அவர்கள் பிறந்தநாள்.
❖ ஆகஸ்ட் 25ல் கேப்டன் விஜயகாந்த் 71வது பிறந்த நாள் விழா.
❖ 1906ஆகஸ்ட் 25ல் கிருபாநந்த வாரியார் அவர்கள் 118வது பிறந்த நாள்.
❖ ஆகஸ்ட் 26ல் அன்னை தெரசா அம்மையார் பிறந்த பொன்நாள்.
❖ 1904ஆகஸ்ட் 26ல் ஜெமினி ஸ்டுடியோ அதிபர் எஸ்.எஸ்.வாசன் பிறந்தநாள்.
❖ 1969ஆகஸ்ட் 26ல் ஆனந்தவிகடன் குருப் அதிபர் எஸ்.எஸ்.வாசன் 65ம் வயதில் காலமானார்.
❖ 2005 ஆகஸ்ட் 28ல் அமெரிக்கா சூராவளிபுயலில் 1400பேர் மரணம்.
❖ 2000 ஆகஸ்ட் 29ல் பிரியங்காவதேரா மகன் ரேகன் 24வது பிறந்த நாள் வரும் தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.ஆக வாய்ப்பு.
❖ 1977 ஆகஸ்ட் 29ல் மதுரை வந்த இந்திராகாந்தி திமுக வினரால்தாக்கப்பட்டார்.
❖ 1957ஆகஸ்ட் 30ல் நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் நினைவு நாள்.
❖ 2001 ஆகஸ்ட் 30ல் தலைவர் ஐயா.ஜி.கே.மூப்பனார் காலமானார்.
❖ காங்கிரஸ் மைதானத்தில் காவல் தெய்வமாகி உள்ளார்.
❖ 2020 ஆகஸ்ட் 31ல் ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி நினைவு நாள்.




உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி துணை

**ஸ்ரீ மகாலட்சுமி ஜோதிட நிலையம்**

**நாடார் திருமண தகவல் மையம்.**

எண்:17, டாக்டர் அம்பேத்கர் சாலை, பெரியார் நகர் விரிவு, மடிப்பாக்கம், சென்னை-91.
நெல்லை எம்.ஆர்.இராமச்சந்திரன்நாடார்.,M.Sc., Astrology.
E-mail:yogamaster.chandran@gmail.com Ph:9786722267. 9444062989.
வாட்சஆப்பில் தொடர்பு கொள்ளவும்.





## விஜிபி.உலகத் தமிழ்ச் சங்கத்தின் 30வது ஆண்டு விழா 30 தமிழறிஞர்களுக்கு வி.ஜி.பி.இலக்கிய விருது சபாநாயகர் அப்பாவு அவர்கள் வழங்கினார்.

விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 30வது ஆண்டு விழா சென்னையில் நடந்தது. விழாவுக்கு விஜிபி உலக தமிழ்ச் சங்கத் தலைவர் வி.ஜி.சந்தோசம் தலைமை தாங்கி தலைமை உரை நிகழ்த்தினார். வி.ஜி.பி ரவிதாஸ் வரவேற்றார். விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 30வது ஆண்டு விழா மலர் மற்றும் விஜிபி ராஜாதாஸ் எழுதிய என் தந்தையாரின் அறிவுச் சிந்தனைகள் என்ற நூலை சபா நாயகர் அப்பாவு அவர்கள் வெளியிட்டார். மார்கிரெட் பாஸ்டின் எழுதிய சிலம்பு என்னும் இசை நாட்டியக் களஞ்சியம் நூலை, அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டார். முத்துக்குமாரசாமி எழுதிய வ.உ.சிதம்பரனார் நூலை வி.ஐ.டி.வேந்தர் விசுவநாதன் வெளியிட்டார்.

விழாவில் சிறந்த 3 தமிழ்ச் சங்கத்திற்கு விருது, அன்புபாலம் கல்யாணசுந்தரம், பாடகர் வேல் முருகன், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உள்பட 30 தமிழறிஞர்களுக்கு விஜிபி இலக்கிய விருதை சபாநாயகர் அப்பாவு வழங்கி பேசுகையில்... விஜி.சந்தோசம் சென்னையை சேர்ந்தவர் என்று பலர் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர் சென்னையை சேர்ந்தவர் அல்ல. நான், வி.ஜி.பன்னீர்தாஸ், வி.ஜி.சந்தோசம் எல்லோருமே நெல்லையில் பிறந்து வளர்ந்து தாமிரபரணி தண்ணீரை பருகி அதன்பிறகு சென்னையில் அடையாளத்தை கண்டவர்கள். தினத்தந்தியை எடுத்துக் கொண்டால் சி.பா.ஆதித்தனார், அவரது புதல்வர்கள் எல்லோருமே அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். பாரதியார், வ.உ.சிதம்பரனார் எல்லோருமே நெலை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தான். வி.ஜி.சந்தோசம் உலகத் தமிழ்ச்சங்கம் அமைத்து உலகம் முழுவதும் 153 இடங்களில் திருவள்ளுவர் சிலையை நிறுவியுள்ளார். அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா, இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் திருவள்ளுவர் சிலையை அமைத்து ஒரு சாமானியனால் எதையும் சாதிக்க முடியும் என்று நிரூபித்து காட்டியுள்ளார். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் ஓய்வு பெற்ற நீதிபதி டி.என்.வள்ளிநாயகம், அவ்வை அருள், நாஞ்சில் பீற்றர், மல்லை சத்யா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் வி.ஜி.சந்தோசம் அவர்களுக்கு கிரீடம் அணிவித்து செங்கோல் வழங்கப்பட்டது. முடிவில் வி.ஜி.பி.ராஜாதாஸ் நன்றி கூறினார். உலகநாயகி பழனி அவர்கள் தொகுத்து வழங்கினார்.


அம்பத்தூர்: 9840287570
திருமுல்லைவாயில்: 9840948727



அமிர்தகனி
திருமண தகவல் மையம்
(நாடார் சமூகத்திற்கு மட்டும்)
எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயில், சென்னை-62.





SVS நாடார் திருமண தகவல் நிலையம்
(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)
No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.
எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு
தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424 E.mail:sundarsinghnmb@gmail.com /
website: www.svsnadarmatrimony.com

# அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களில் மக்கள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் நினைவு நாள் அனுசரிப்பு:






இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவரும், இந்தியாவின் புகழை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்ற மாமனிதர், மறைந்த மக்கள் குடியரசு தலைவர் டாக்டர்.ஏபிஜே அப்துல்கலாம் ஐயா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவருடைய கனவை நனவாக்கும் வகையில் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில் ஐயா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் தலைவர் முனைவர்.ச.தேவராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். முன்னிலை அன்னைவேளாங்கண்ணி கல்லூரி செயலாளர் முனைவர்.தே.தேவ்ஆனந்த் அவர்கள், சிறப்பு விருந்தினராக நடிகரும், தயாரிப்பாளரும், நடிகர் சங்க தலைவருமான திரு.விஷால் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. மறைந்த டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் ஐயா அவர்களின் பத்து அம்ச உறுதிமொழிகளை, கலைக் கல்லூரி மாணவிகள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர், அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளியின் முதல்வர், முனைவர் திருமதி.டெல்பின் தேவராஜ், துணைச்செயலாளர் டாக்டர் ஸ்ரீதேவிதேவ் ஆனந்த், முதல்வர் திருமதி விமலா, கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவிகள், பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.






அதே போன்று சென்னை பெருங்களத்தூரில் உள்ள அன்னைவேளாங்கண்ணி பொறியியல் கல்லூரியில் மறைந்த டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் ஐயா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவருடைய படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி உறுதிமொழிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது அத்துடன் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன இந்நிகழ்ச்சியில் அன்னை வேளாங்கண்ணி கல்லூரி முதல்வர் திரு.திருமுருகன் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




என்றும் கல்விப் பணியில் **Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.
www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.

# தமிழக நாடார் மேட்ரிமொனி

SINCE 2007

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

தங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.

USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost)

BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.

திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# உலகம் சுற்றினோம் சந்திரிகா ராஜமோகன்.

## 6.இங்கிலாந்து சுற்றுலா

லண்டன் இருந்து புறப்பட்டு பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் முடித்து விட்டு இறுதியில் பிரான்ஸ் சுற்றுப் பயணம் முடிந்த பிறகு லண்டனுக்கு வந்து சேர்ந்தோம். பின்னர் இங்கிலாந்து சுற்றுப்பயணம் ஆரம்பமானது.

டாக்டர் பி.கே.எஸ் குடும்பத்தினர் எங்களை பிரிட்டிஷ் மியூசியத்திற்கும், மெழுகுசிலை கண்காட்சி (மடானே டுஸாட்) அழைத்துச் சென்றார்கள்.

பிரிட்டிஷ் மியூசியத்தில் 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்திய சிற்பங்களும், பர்மா போன்ற இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புத்தர் சிலைகளும், இரண்டு பெரிய இரும்பு மேஜை, பல்லவர் காலத்திய சிற்பங்கள், நாணயங்கள் ஆகியவற்றையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

மெழுகு பொம்மை மியூசியத்தில் மடானே டுஸாட் மியூசியத்தில் பிரபலமான இப்போதைய தேசத் தலைவர்கள், டென்னிஸ் ஆட்டக்காரர்கள், மைக்கேல் ஜாக்ஸன், இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆகியோருடைய மெழுகுச் சிலைகளைப் பார்த்தோம். பெரும்பாலானவர்களின் சிலை மிகவும் உயிர்த்துடிப்புடன் விளங்கியது. ஆனால் இந்திரா காந்தி சிலைகள் நன்றாக உருவாக்கப்படவில்லை. எனவே சற்று கனத்த மனத்துடன் வெளியே வந்தோம். கில்லெட்டின் இயந்திரத்தில் பலரது தலை வெட்டப்பட்ட நிகழ்வு, தூக்குதண்டனை ஆகியவை நிறைவேற்றப்பட்ட இடங்களைப் பார்த்தோம். ஜோன் ஆப் ஆர்க்-ஐ எப்படி நெருப்பிலிட்டுக் கொன்றார்கள் என்ற செய்திகளை விளக்கும் மெழுகு உருவ பொம்மைகள் நன்கு வடிவமைக்கப்பட்டிருந்தன.

மறுநாள் டாக்டர் நண்பர் சரஸ்வதி மகாலிங்கம் அவர்களது இருப்பிடம் உள்ள கிளாஸ்கோ நகர் நோக்கி எங்கள் பயணம் ஆரம்பம் ஆனது. வழிநெடுக பசுமையைக் காண முடிந்தது. மழை விட்டு விட்டு பெய்தது. கிளாஸ்கோ நகரை அடையும் போது மாலை 6.30 ஆகிவிட்டது. ஆங்கே டாக்டர் சரஸ்வதி மகாலிங்கம் எங்களுக்காக காத்திருந்தார். அவரது காரிலேயே கிளாஸ்கோ நகரை சுற்றிப் பார்த்தோம். கால்வின்டேல் பகுதியில் டோர்செஸ்ட்டர் தெருவில் அவரது வீடு இருந்தது. நம் சென்னையில் மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் பில்டிங் போன்ற அதே அச்சு அசலான கட்டடம் கிளாஸ்கோவில் உள்ளது. அதை ஆச்சரியத்தோடு பார்த்தோம். இரவு அவர் வீட்டில் தங்கினோம்.

எடின்பரோ விஜயம்:

ஜூன் 8ஆம் தேதி (1997) ஞாயிறு அன்று ஸ்காட்லாந்து பகுதியிலுள்ள எடின்பரோ கோட்டையைப் பார்க்கச் சென்றோம். இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் எடின்பரோ கோமகன் இந்த நாட்டை சேர்ந்தவர். மலையில் அமைந்திருந்த அந்த அரண்மனையில் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்தோம். ராணி குடும்பத்தினர் அணிந்திருந்த நகைகள், நடந்த போர்கள், ராணி செய்து கொண்ட 3 திருமணங்கள், அவர்களுடைய பரம்பரை ஆட்சி, பலரது சமாதிகள் என பலவற்றையும் பார்த்து விட்டு பின்னர் எடின்பரோ ஊரைச் சுற்றிப் பார்த்தோம். பழமையான ஊர். பழைய வீடுகள் நன்கு பராமரிப்பில் இருந்தன. தொலைபேசியைக் கண்டு பிடித்த அலெக்சாண்டர் கிரஹாம்பெல் வசித்த வீட்டையும் பார்த்தோம். வில்லிங்கடன் சிலை, மேலும் பல்வேறு பதவிகள் வகித்தவர்களின் வீடுகள், எடின்பரோ பள்ளி போன்றவற்றை எல்லா பேருந்தில் இருந்தவாறு காண முடிந்தது.




மேல்பகுதி திறந்திருக்கும் பஸ்ஸில் உட்கார்ந்திருந்தோம். லேசான சாரல் மழை, குளிர்ந்தகாற்று வீச, பஸ்ஸின் கீழ் பகுதியில் வந்து அமர்ந்து கொண்டோம். கிளாஸ்கோ பகுதியில் மாலை இருள் சூழ இரவு 10.30-11 மணி ஆகிவிடுகிறது. அதுவரை பகல் போல வெளிச்சம். மறுநாள் லண்டனை நோக்கிப் பயணம் ஆரம்பம் ஆனது. - தொடரும்...........



அரிசி மொத்த வியாபாரம்.
செல்:9840994451, 26380752 / 73.
சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.
செல்வராஜ் சூப்பர் மார்கெட்
286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com


ஜெயம் ரியல் எஸ்டேட்&
ஜெயம் ஸ்வீட் ஸ்டால்
வீடு மனை வாங்க விற்க அணுகவும்.
கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473
கே.கே.நகர். எஸ்.தேவதாஸ் செயல் தலைவர்.
நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

# காமராஜர் ஒரு சகாப்தம்

**வரலாற்றில் விருதுபட்டி**

பூஜை முடிவில் பிரசாதம் கொடுத்தபோது, மாணவர்கள் முண்டி அடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கம் ஒதுங்கி நின்ற காமராஜ், கடைசியில் ஆசிரியர் கொடுத்த பிரசாதத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான். “எல்லாரும் நிறைய நிறைய வாங்கிக் கொண்டு போனார்களே! நீ மட்டும் கொஞ்சமாக வாங்கி வந்திருக்கிறாயே!” என்று பாட்டி கேட்டார். “பாட்டி! எல்லாரைப் போலவும் என் பங்குக் காசை நான் கொடுத்தேன். எல்லாருக்கும் கொடுத்ததைப்போல எனக்கும் என் பங்கை வாத்தியார் தரணும் இல்லையா? எல்லாரைப் போலவும் என்னைச் சண்டை போட்டு வாங்கச் சொல்கிறாயா? இதை வாத்தியார்தானே பொறுப்போடு செய்யணும். வந்து கேளு பாட்டி!” என்றான் சிறுவன் காமராஜ். அந்த வயதில் காமராஜ் பேசிய பேச்சு, பாட்டிக்குப் புதுமையாக இருந்தது. ‘பதவிக்கும் பட்டத்திற்கும் அடித்துக் கொள்ளும் சமுதாயத்தில் சமதர்மத்தை நிலைநாட்டப் போகிறவன் அவன்தான்’ என்பதை அவர் அறியவில்லை!

பிள்ளைப் பருவத்தில் காமராஜ் நிகழ்த்திய அருஞ்செயல்கள் ‘இவன் நெருக்கடிகளையும் சோதனைகளையும் சமாளித்துச் சாதனை படைக்கும் வலிமை கொண்டவன்’ என்பதையே உணர்த்தின. ஒரு நாள் குளித்து விட்டு வந்த கோயில் யானை, பாகனின் கட்டுக்கு அடங்காமல் மதம் கொண்டது போல் பிளிறிக்கொண்டு வீதியில் ஓடியது. இதைக் கண்ட காமராஜ், காரணத்தைப் புரிந்துகொண்டு விரைவாகக் கோயிலுக்கு ஓடி, சத்திய சங்கிலியைத் தேடி எடுத்துக் கொண்டு விரைவாக வந்து யானைமுன் வீசினான். உடனே யானை சாந்தமடைந்து, சங்கிலியைத் தூக்கிக்கொண்டு காமராஜைப் பின் தொடர்ந்தது. பாகன் மாரியப்பத் தேவருடன் காமராஜ் இணக்கமாக இருந்ததால், யானைக்கு வாழை முதலான பழங்களை அடிக்கடி கொடுப்பதுண்டு. இந்த உறவுதான், பாகனை மீறிச் செயல்பட்ட யானையை அடக்க உதவியது. மிருகமாக இருந்தாலும் அந்த யானை காமராஜின் அன்புக்கு அடிபணிந்து நடந்தது.

காமராஜின் தாத்தா சின்னப்ப நாடார் காலமான சிறிது காலத்தில், தேங்காய் மொத்த வியாபாரம் செய்து வந்த தந்தை குமாரசாமி நாடாரும், ஒரு நாள் தலைவலி என வந்து படுத்தார்; எந்த வைத்தியத்திற்கும் பயனில்லாமல் மறுநாள் மரணமடைந்தார். குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசு, நம்பிக்கை நட்சத்திரம் காமராஜ்தான். ஆகவே, ஜவுளிக்கடை நடத்தி வந்த தாய் மாமன் கருப்பையா நாடார், அந்தக் குடும்பத்திற்கும் உதவும் பொறுப்பைக் கடமையாகக் கொண்டார்.

காமராஜின் பள்ளிப் படிப்பு ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தது. திடீரென டைபாய்டு காய்ச்சல் வந்து, நாற்பது நாள் பள்ளிக்குப் போக முடியாமல் போயிற்று. அதன் பின் காமராஜைப் பள்ளிக்குப் போகாமல் ஊர் சுற்றினாலும், மாலையில் பள்ளிக்குச் சென்று நல்ல பிள்ளையாக வீடு திரும்புவான். இரவு வேளையில் தனிப்பாடம் படிக்கச் சென்றதால் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றான். ஒரு நாள் தோழர்களுடன் ஊர் சுற்றிவிட்டு வரும்போது, தபாலாபீசு சுவரில் ‘வந்தே மாதரம்’ ஆட்கள் சுவரொட்டி ஒட்ட, அதைத் ‘தீக்குச்சி’ ஆட்கள் தடுக்க, ஒருவகை ஓடிப் பிடிக்கும் விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்படி ஒட்டப்பட்ட ஒரு சுவரொட்டியின் எழுத்துக்களை “வ... ந்...தே... மா... த... ர... ம்...” என்று கூட்டி, முதல் முறையாகக் காமராஜ் படித்தான்.

தென் மாவட்டங்களில், குறிப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி போன்றவர்கள் சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆகவே, அங்கே அச்சடிக்கப்பட்ட அல்லது வெள்ளைத் தாளில் எழுதப்பட்ட ‘வந்தே மாதரம் ஆட்கள்’ என்று அழைத்தார்கள். அதேபோல் உடுத்தி இருந்த சீருடை காரணமாகப் போலிஸ்காரர்களைத் ‘தீக்குச்சி ஆட்கள்’ என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளைப் போலிஸ்காரர்கள் கிழித்து எறிவார்கள்; ஒட்டாமல் தடுக்க முயற்சி செய்வார்கள். அப்போது மோதல்கள் நடப்பதும் உண்டு. (தொடரும்)

**தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தொகுதியில் குரும்பூர் ரயில் நிலையம் எதிரில் நாலுமாவடி ஊர் பள்ளி காமராஜர் மேல்நிலைப் பள்ளி 65 ஆண்டாக செயல்படுகிறது**

**காமராஜர் தொண்டர் சூளைமேடு த.ராமச்சந்திரன் சிறப்பு செய்தி**

நாலுமாவடி ஊர் பெரியவர் எல்.ராமசாமி நாடார் முயற்சியால் 1962ல் பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக வருகை தந்து பள்ளிக் கூடத்தை சுற்றிப்பார்த்து பாராட்டிச் சென்றார். சுமார் 1200 மாணவ - மாணவிகள் கல்வி பயில்கின்றனர். இந்த பள்ளிக்கு மோகன் சி.லாசரஸ் அவர்கள் இரண்டு அடுக்கு கட்டிடமும் கட்டித்தந்தார். இவர் தம்பி சி.நவநீதன், ஞா.அழகேசன், ஆர்.தனஞ்செயன் பள்ளி நிர்வாகத்தை கவனித்து வருகின்றனர்.

இந்த ஆண்டு முதல் எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகள் ஆரம்பித்து உள்ளனர். இந்த ஆண்டு ஜூலை 15ல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 6 அடி உயர வெண்கல சிலை அமைத்து திறப்பு விழா நடத்த தீர்மானித்து உள்ளனர். நாலுமாவடி ஸ்ரீ பாதகரை சுவாமி கோவில் புரட்டாசி மாதம் 3 நாள் நடைபெறும் விழா முடிந்து மறுநாள் காமராஜர் சிலையினை திறக்க வேண்டும் என தீர்மானித்து உள்ளனர். சிலைக்கு மட்டும் ரூ.6 லட்சம் ஆகும் என கூறுகின்றனர். சிலையை திறக்க யார் வருவர் என தீர்மானிக்க வில்லை. சிலை நிறுவ நிதி உதவி தேவைப்படுகிறது. உத்தம தலைவர் சிலை அமைக்க பணம் தர கேட்டுக் கொள்கிறோம். பணம் தந்து ரசீது பெற்றுக் கொள்ளுங்கள். நன்றி!

சூளைமேடு த.ராமச்சந்திரன், செல்:9384533221, அமைந்தகரை ஆர்.தனஞ்செயன், செல்: 9551019121, பாடி டி.முருகேசன், சுபா ஸ்டோர்ஸ், செல்: 9445441111.



# கண்ணீர் அஞ்சலி

கள்ளிக்குளத்தை சேர்ந்த முன்னாள் விமானபடை அதிகாரி திரு.மைகில்ராஜ் அவர்களுடைய மனைவியும், திரு.Joseph Ravi அவர்களுடைய தாயாருமான திருமதி.கிரேஸ்லீலா அவர்கள் 17.7.2023 அன்று மரணம் அடைந்தார். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

***இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை***

**-டாக்டர் பி.சௌந்தரராஜன்.**

டி.பி.க்கு என்ன அறிகுறிகள்?

எலி, பறவைகள், ஆடு, மாடு, நாய், பூனை எல்லாவற்றுக்கும் டி.பி.வரும். பசுவுக்கு டி.பி.இருந்தால் அந்தப் பாலைக் குடிக்கிற நமக்கும் டி.பி வரும். அதனால் பசும்பாலை எப்போதும் காய்ச்சியே குடிக்க வேண்டும்.



சரி... நாம் விஷயத்துக்கு வருவோம். சிறுநீரக டி.பி. இருக்கிறதா என்றறிய வேறு என்னென்ன அறிகுறிகள் உண்டு? பெண்களுக்கு மாத விலக்கு ஒழுங்கில்லாமல் இருப்பது, அடிவயிற்றில் தாங்க முடியாத வலி இருப்பது, மகப்பேறின்மை, மிகமிக அதிகமாக வெள்ளைப்படுவது இவையெல்லாம் கூடச் சிறுநீரக டி.பி-யின் அறிகுறிகளாக இருக்கலாம்.

ஆண்களுக்கு விந்தணுவுடன் ரத்தம் கசிவது (Hemospermia) டி.பி-யின் அறிகுறியாக இருக்கலாம். பொதுவாக திடீர் உயர் ரத்த அழுத்தம், அடிக்கடி காய்ச்சல், உள் காய்ச்சல், காரணமில்லாமல் உடம்பு சோர்வாக இருப்பது. தாங்க முடியாத இடுப்புவலி, காரணமில்லாமல் எடை குறைவது. சிறுநீர்ப் பாதையில் கட்டிகள் உண்டாவது இவையும்கூட டி.பியின் அறிகுறிகளாக இருக்க வாய்ப்புகள் அதிகம்.

இவர்களின் சிறுநீரகத்தை ஸ்கேன் செய்து பார்த்தால் கிட்டினியைச் சுற்றி உள்ளே வெள்ளையாக கால்ஷியம் படிந்து, சிறுநீரகமே கற்சிலை மாதிரி இருக்கும். அதற்குள் சிறுநீரகக் கற்கள் உண்டாகும்.

இது போன்ற எந்த அறிகுறிகளும் இல்லாமலும்கூட டி.பி. ஏற்படுவதுண்டு. ஏனெனில், டி.பியின் பாதிப்பால் ஒரு சிறுநீரகம் செயலிழந்தாலும் இன்னொரு சிறுநீரகம் அதுபாட்டுக்குத் தன் வேலையைச் செய்தபடி இருக்கும். அதுவும் பழுதுபட்டால்தான் விஷயம் வெளியில் தெரியும்.

இதுபோன்ற காரணங்களால்தான் வருடத்துக்கு ஒருமுறை மாஸ்டர் ஹெல்த் செக்-அப் மிகமிக அவசியம் என்பதை வலியுறுத்துகிறேன்.

தவிர, நுரையீரல் டி.பி.வந்தவர்கள் யூரினரி இன்ஃபெக்ஷனை அலட்சியம் செய்யவே கூடாது. டி.பி-யால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எய்ட்ஸ் உண்டாக்குகிற கிருமியான ஹெச்.ஐ.வி. இருக்கிறதா என்று பார்ப்பதும் சமீப காலமாக மருத்துவர்களால் அறிவுறுத்தப்படுகிறது. அதேபோல ஹெச்.ஐ.வி.பாஸிடிவ் ஆட்களுக்கு நுரையீரல் டி.பி-க்கான இருமல் போன்ற வெளிப்படையான அறிகுறிகள் இல்லாவிட்டாலும் கூட, கண்டிப்பாக ரீனல் டி.பி-க்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் டி.பி. இருக்கிறதா என்று கண்டறிய ஆறு வாரம் காத்திருக்க வேண்டியிருந்தது. இப்போது அதிகபட்சம் ஒரு வாரம்தான். யூரின் பி.சி.ஆர், ஐ.வி.பி. பரிசோதனை, சிஸ்டோஸ்கோபி முறை என்று மருத்துவ உலகம் மிகவும் முன்னேறிவிட்டது.

சிறுநீரக டி.பியைப் போலவே அதிகம் வெளியில் தெரியாத இன்னொரு வியாதி ஜெனிட்டல் ஃபைலேரியாஸிஸ். சிறுநீரகம், பிறப்புறுப்புகள் தொடர்பான யானைக்கால் வியாதி இது.

யானைக்கால் வியாதி இருப்பவர்களின் ஒரு கால் பெரிதாக வீங்கியிருக்கும். இவர்களுக்கு இரண்டாவது காலும் வீங்க ஆரம்பித்தால் சிறுநீரகத்தில் ஏதேனும் பிரச்னை இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும். ஏனெனில், அது சிறுநீரக வியாதியின் அடையாளம்.

இப்போதுதான் நாகரீகமாக அண்ணியார் என்று அழைக்கின்றோம். ஆனால் எங்கள் கிராமப்புறங்களில் அண்ணியாரை மதினி என்று தான் கூப்பிடுவது வழக்கம். அந்த வார்த்தையையும் கூடப் பெரும்பாலும் யாரும் ஒழுங்காக உச்சரிக்க மாட்டார்கள் மைனி என்று தான் பொதுவாக அழைப்பார்கள். நானும் எங்கள் அண்ணியை அப்படித்தான் அழைத்தேன். அப்படி நான் அழைத்தது ஒரு வேளை அவர்களுக்கு வித்தியாசமாகக்கூட இருந்திருக்கலாம். ஏனென்றால் நகரத்தில் அதுவும் நாகரீகமான சூழ் நிலையில் வாழ்ந்து பழகியவர் அண்ணி.

மனம் விரும்பிய காதலரைக் கணவராக ஏற்றதில் அண்ணிக்கு மட்டற்ற மகிழ்ச்சி தான். பெற்றோரைப் பிரிந்து வந்ததில் கூட அவ்வளவாக வேதனை இல்லை. ஆனால் இதற்கு முன்பு அவர்களுக்குச் சிறிதும் அனுபவம் இல்லாத எங்கள் கிராமப் புறவாழ்வும், கிராமத்து மக்களின் பழக்க வழக்கங்களும் என்னவோ போல் இருந்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் அவர்கள் பார்வையில் மிரட்சியும் சிறிது அச்சமும் கூடத் தெரிந்தது. ஆனால் வீட்டில் நாங்கள் அனைவரும் அண்ணியிடம் காட்டிய அன்பும் பாசமும் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையளித்தது. அதனால் எதைப் பற்றி கவலையும் பின்பு அவர்களுக்கு இல்லை.



இனிய நண்பனே, கிராமப் புறத்து மக்களின் வாழ்க்கை முறைகளைத்தான் நீ நன்கு அறிவாயே. அப்பாவி மக்களான அவர்கள் ஆடை அணிகலன்களைப் பற்றியெல்லாம் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. வேளாவேலைக்குச் சாப்பிட வேண்டும் என்று கூட நினைப்பதில்லை. கழனியே கதியென்று இரவும் பகலும் உழைத்துக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட வித்தியாசமான மக்களை எங்கள் கிராமத்தில் பார்த்தது அண்ணியாருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதுபோல் கிராமத்து மக்களும் அண்ணியை ஆச்சரியத்துடனேயே பார்த்தார்கள்.

அப்போதெல்லாம் அண்ணிக்கு வெட்கமாகத் தான் இருக்கும். இருந்தாலும் படித்த பெண் என்பதால் பாமர மக்களின் அன்பான பார்வைக்கு அந்த அர்த்தத்தை அவர்களால் காண முடிந்தது. ஒரு சில நாட்களிலேயே கிராம மக்களுடன் ஒன்றிப்பழகிவிடும் பக்குவத்தை அண்ணியார் பெற்று விட்டார். இருந்தாலும் அவர்களைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் அருமை அம்மா மிகவும் கவனமாக இருந்தார்கள். அருமை அக்காளும் எப்போதும் அண்ணியுடனேயே இருப்பார். அக்காளை அண்ணிக்கு மிகவும் பிடித்து விட்டதால் அவர்கள் இருவரும் அன்புடன் பழகி வந்தார்கள்.



அடுத்து ஒரு பிரச்சனை எழுந்தது. அது என்னவென்று கேட்கிறாயா? சாப்பாட்டுப் பிரச்சனை தான். அண்ணியார் சைவம். அண்ணியாருக்காக அண்ணாச்சியும் சைவமாகிவிட்டார். மற்றபடி வீட்டில் உள்ள அனைவரும் அசைவம் . உனக்குத்தான் தெரியுமே, கிராமப்புறங்களில் பெரும்பாலும் மீன், கருவாடு என்று அசைவ உணவுதான் தினமும் இருக்கும். முக்கியமான பண்டிகைகளின் போதுதான் சைவ உணவு சமைப்பார்கள். எங்கள் வீட்டின் நிலையும் அது தான். ஆனால் அண்ணியார் வந்தது முதல் சைவ உணவும் தனியாகத் தயார் செய்யப்பட்டது. எங்களை நம்பி வந்திருக்கும் அண்ணிக்காக நாங்கள் எதையும் செய்யத் தயாராய் இருந்தோம். அதனால் சாப்பாட்டுப் பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருக்கவில்லை.

நகரங்களில் வீடுகளில் இருப்பது போல் குளியல் அறை வசதியெல்லாம் கிராமங்களில் இருக்குமா? ஊருக்குப் பொதுவான ஊருணி அல்லது கிணறுகளில் தான் ஊர் மக்கள் குளிப்பார்கள். பாதுகாப்பான குளியல் அறையில் குளித்துப் பழக்கப்பட்ட அண்ணி யாருக்கு கிராமப்புறத்துத் சூழ்நிலை சிறிது சங்கடமாகத்தான் இருந்திருக்கும். இருந்தாலும் சமாளித்துக் கொண்டார்.

ஊரில் வயல் வெளியில் உள்ள கிணற்றுக்குக் குளிப்பதற்காக அண்ணியாரை அழைத்துச் செல்வோம். அண்ணியுடன் அக்காளும் செல்வார். அவர்கள் குளிக்கும் சமயத்தில் அந்தப் பக்கம் வேறு யாரும் சென்று விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு என்னுடையது. யார் சென்றாலும் உடனே - மைனி குளிக்கிறாங்க, அந்தப் பக்கம் போகாதீங்க" அப்படீன்னு நான் சொல்வேன். நான் அப்படிச் சொல்வது அவர்களுக்கு வேடிக்கையாகக் கூட இருக்கும். ஏனென்றால், கிராமப்புறங்களில் வயல்வெளிகளில் உள்ள கிணறுகளில் பெண்கள் குளிப்பது சாதாரணம். அதற்காக அந்தப் பக்கம் ஆண்களே செல்லாமல் இருக்க மாட்டார்கள். கள்ளம் கபடமற்ற கிராமப்புற வாழ்வில் எல்லாம் இயல்பாக நடக்கும். அது எனக்கும் தெரியும். இருந்தாலும் அண்ணியின் மீதிருந்த பாசத்தால் அப்படிப் பாதுகாப்புத்தர வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம்.

- தொடரும்.........




# S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A

**Correspondent**

**Koilpillai Mat.Hr.sec.School**

65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

**மணமேடை அலங்காரம்**:-

(திருமணம் மணமகள் இல்லத்தில் நடப்பதாக எண்ணிக்கொள்வோம்).

திருமண நாளில் முகூர்த்த வேளை நெருங்குவதற்குள் மணவறை எனும் மணமேடை அலங்கரித்து வைக்கப்படுகிறது. மணவறையில் நாற்புறங்களிலும், புஷ்பத்தினால் சோடனை செய்யப்படுகிறது. மணமேடையில் குத்துவிளக்கு, பூரண கும்பங்கள், நிறைநாழி, புஷ்பம், சந்தனம் மற்றும் மங்கலப் பொருட்களும் பூஜைக்கு வேண்டிய தேங்காய், பழம் ஆகிய பொருட்களும் முளைப்பாறியும், அதற்கான நவதானியங்களும் ஹோமத்திற்குரிய சமித்துக்களும் (நெய், விறகு முதலியன) வந்து சேருகின்றன. புரோகிதர் அல்லது குருக்கள் வந்தமர்ந்து திருமணச் சடங்கிற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர். பிரமன்கால் அல்லது அரசாணிக் கால் எனும் அரசமரக்கிளை அங்கு பிரதானமாக வைக்கப்படுகிறது. கும்பமாகிய பயிரை வளர்ப்பதற்கு முன் விவசாயத்திற்கு முக்கிய அடையாளமாகிய முளைப்பாறியில் உரிய நவதானியங்களை நல்ல நேரத்தில் வித்திடப்படுகிறது. மணமேடையில் வைக்கப்படும் பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான காரணமும் உண்டு. அவைகளை இங்கு தனித்தனி விளக்குவதாயின் விரியுமென்றஞ்சி அதை இத்துடன் நிறுத்துகிறோம்.

**மாப்பிள்ளை புறப்படுதல்:**

திருமணநாளில் வரன் சர்வாடம்பர பூஜிதனாக தன் கிரக ராணியின் இல்லத்தை நோக்கி பவனியாகப் புறப்படும் வைபவம் மிகவும் சிறப்பானது. இவ்வாறு புறப்படும்முன் மணமகன் தனது பெற்ற தாயின் குடும்பத் தலைவனாகிய தாய்மாமனாரின் நல்லாசீர்வாதத்தைப் பெறுகிறான். மணமகன் தாய் மாமனாருடன் தனது குடும்பத்தலைவனாகிய அவ்விரு குடும்பங்களின் ஒரு தனிப் பிரநிதியாக திருமண விழாவில் பிரவேசிக்கிறான்

திருமண வைபவங்களில் தாய் மாமனால் பட்டம் சூட்டும் சடங்கு முக்கியமானது. மணமகனுக்கு தாய் மாமன் தனது கையால் தலைப்பாகை கட்டி அவனை குடும்ப முதல்வனாக முடி சூட்டுகிறான். இதனைப் பின்னால் விவரிப்போம். அக்காலங்களில் மணமகன் பவனி வருவது ஒரு அலாதியான காட்சி. கொம்புப்பல்லாக்கு எனும் திறந்த அலங்கார சுமை பல்லக்கில் மணமகன் வீற்றிருந்து புறப்படுவான். அவன் கையில் கட்டாரி அல்லது ஒரு வாளை ஏந்தியிருப்பான். மற்றொரு கையில் தாம்பூலம் அல்லது புஷ்பப் செண்டு தாங்கியிருப்பான். பல்லக்கின் முன் அவனது நண்பர்களும் உறவினர்களும் குதிரைகளில் ஏறி தமது குதிரையேற்றத் திறமையைக் காட்டியவாறு செல்வார்கள். சாதாரணமாக வீட்டுக்கு வெளியே வராத பெண்கள் மூடிய பல்லக்குகளில் அமர்ந்து மணமகனைத் தொடர்வார்கள். மற்றையோர் சதங்கை கட்டிய மாடுகளை வண்டியில் பூட்டி ஜில் ஜில் என்ற நாதம் ஒலிக்க தொடருவார்கள். மற்றும் மங்கலப் பொருட்களையும், பழங்களையும் பலகாரப் பட்சணங்களையும் தாம்பாளங்களில் ஏந்தியவாறு பணிப்பெண்களின் வரிசை பின்தொடரச் செல்வர். இத்தனை ஆரவாரத்துடன் மணமகளின் வீட்டை அணுகும் போது குறிப்பான ஓரிடத்தில் பெண் வீட்டார் எதிர் கொண்டழைப்பதற்காக மேளதாளங்களுடன் வாணம், அதிர்வேட்டு முதலிய ஒலிகள் காதைப் பிளக்க வந்து சேருவார்கள்

இங்கு மணமகனை எதிர்மாலை சூட்டி வரவேற்கும் வைபவம் நடைபெறும். பெண்ணின் தந்தை தானும் ஓர் பல்லக்கில் வந்து மணமகனின் பல்லக்கை அணுகியதும் அந்த பல்லக்கினுள் பிரவேசித்து மணமகன் கழுத்தில் மாலை சூட்டி அவனது விரலுக்கு மோதிரம் அணிவிப்பார். இவ்விதமான சடங்குகள் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் நடைபெற்ற திருமண வைபவங்களில் நிகழ்ந்ததாகும். இக்காலங்களில் குதிரை, பல்லக்குகளுக்குப் பதிலாக கார்களில் பவனி வருவது தெரிந்ததே. மணமகன் அரச சம்பிரதாயத்துடன் வாளேந்தி புறப்பட்ட காலம் மறைந்தது. அதற்குப் பதிலாக வெள்ளிப் பிடியமைந்த எழுத்தாணி ஏந்திச் செல்லும் காலம் அதனைத் தொடர்ந்தது. அதன் பின்னர் மடக்குக் கத்தியை இடுப்பில் சொருகிக் கொள்ளும் காலம் வந்தது. மணமகன் பவனிச் செல்லும் போது பேய், பூதம் அணுகாமல் இருக்க என்று சாஸ்திரத்திற்காக ஓர் இரும்புச் சாவியை வைத்துக் கொண்டால் போதும் என்ற மனநிறைவு மக்களிடத்தில் தோன்ற ஆரம்பித்தது. மாப்பிள்ளைக்கு காக்கைவலி வரும்போல் இருக்கிறது - அதனால்தான் இரும்பைக் கையில் வைத்திருக்கிறார் என்று கிண்டல் பேசும் காலம் வரவே, கத்தி ஏந்திய கரத்தில் மாப்பிள்ளை இக்காலங்களில் கைக்குட்டை அல்லது பூச்செண்டுடன் காட்சியளிக்கிறார். “கத்தி போச்சுது வாள் வந்தது” என்ற கதைக்கு இது சமமாகும்.




R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

R.S.SANTHANAM

ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-உடன்குடி, பிறந்ததேதி-2.2.1992, ராசி-தனுசு, நட்சத்திரம்-உத்ராடம் 1ம் பாதம், நிறம்-சிவப்பு, உயரம்-153செ.மீ, படிப்பு-MCA., Accenture., Software Engineer, Bengaluru., மாதவருமானம்-85,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9488725804, 9442925804, File No:M-146G

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| | இராசி | | |
| சூபுத சனி | | | வியா |
| சுசந் செராகு | லக் | | |

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சூரி |
| | அம்சம் | | புத ராகு |
| லக் கே | | | சுக் |
| சந் | செ | வியா | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:உடன்குடி, வாகைவிளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-23.9.2000, நிறம்-மாநிறம், உயரம்-5.3, ராசி-கடகம், நட்சத்திரம்-புனர்பூசம் 4ம் பாதம், படிப்பு-MBA in HR., HR in Annalect, Guindy, இந்த மணமகளுக்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9840755413, 9710138278, File No:M-186-G.

| | | | |
|---|---|---|---|
| | | வியா சனி | ராகு |
| | இராசி | | லக் சந் |
| | | | செவ் |
| கேது | | சுக் புத | சூரி |

| | | | |
|---|---|---|---|
| | - | ராகு | செவ் வியா |
| சூரி | அம்சம் | | சந் |
| சனி லக் | | | |
| | கேது | சுக் புத | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-தென்காசி மாவட்டம், பிறந்ததேதி-16.12.1997, வயது-25, நிறம்-புதுநிறம், உயரம்-167செ.மீ, ராசி-மிதுனம், நட்சத்திரம்-புனர்பூசம் 2ம் பாதம், படிப்பு-M.Sc., Biotechnology, Currently Prusuing Ph.D., Biotechnology with Stipend., இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை.9488574646, File No:M-188-G

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) மாந் | | | சந் |
| கேது | இராசி | | |
| லக்செ குருசு | | | ராகு |
| புத(வ) சூரி | | | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூகே புத(வ) | சந் | லக் |
| செவ் மாந் | அம்சம் | | |
| | | | குரு |
| சனி (வ) | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:பால்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-8.9.2000 நிறம்-மாநிறம், உயரம்-5.3, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராடம், படிப்பு-B.E., ECE., இந்த மணமகளுக்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:8778646288. 9444295510, File No:M-192-G.

| | | | |
|---|---|---|---|
| | | குரு சனி | ராகு |
| | இராசி | | செவ் |
| லக் | | | சூரி |
| சந் கேது | | | சுக் புத |

| | | | |
|---|---|---|---|
| செவ் | புத | ராகு | குரு |
| | அம்சம் | | |
| சனி | | | |
| | கேது | சுக் புத | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:கச்சினாவிளை, குரும்பூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-18.10.1995, வயது-27, நிறம்-மாநிறம், உயரம்-158செ.மீ, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், படிப்பு-B.E., (ECE)., IT., Engineer., (Wipro)., Income:9,00,000Per Annum., இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9443987792, File No:M-194-G

| | | | |
|---|---|---|---|
| | கே | | |
| சனி | இராசி | | சந் |
| | | | லக் |
| | செவ் குரு | சுக் ராகு | சூரி புத |

| | | | |
|---|---|---|---|
| | கேது | புத | |
| சுக் சனி | அம்சம் | | |
| குரு | | | செவ் |
| | சந் | ராகு | லக் சூரி |



# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:M-193-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு குரு |
| சனி ராகு | | | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந் சுக் | | குரு செவ் |
| | அம்சம் | | |
| சூரி | | | |
| சனி புத | | ராகு | |

## R.C.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், கொம்மடிக்கோட்டை, இருப்பிடம்-உள்ளகரம்,சென்னை, பிறந்ததேதி-8.11.1996, உயரம்-5அடி, நிறம்-மாநிறம், படிப்பு-B.SC., MBA., H.CL., மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9789867429, File No:RC-334-G.

## C.S.I.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:அருலூர், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-20.6.1999, உயரம்-164செ.மீ, நிறம்-மாநிறம், படிப்பு-B.Com., இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல மணமகன் தேவை. தொடர்புக்கு:9380747220, 9962562333, File No:CSI-450-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி:-10.1.1992, உயரம்-5.6, நிறம்-சிவப்பு, ராசி-கும்பம், நட்சத்திரம்-பூரட்டாதி, படிப்பு-ME., படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:7418223106, File No:M-187-G

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| சந் | இராசி | | |
| சனி | | | குரு |
| செரா புதசூ | சுக் | | |

| | | | |
|---|---|---|---|
| | | | செவ் சந் |
| கேது சனி | அம்சம் | | புத |
| | | | ராகு |
| சுக் | சூரி | குரு | |

## C.S.I. கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திக்கனம்கோடு, கன்னியாகுமரி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.5.1997, உயரம்-165செ.மீ, படிப்பு-B.E., (ECE)., Senior Quality Service Associate Amazon Chennai., இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள நன்கு படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444289219, File No:CSI-448-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:நெல்லை மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்த வருடம்-1990, நிறம்-சிவப்பு, உயரம்-155செ.மீ, ராசி-க்ன்னி, நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-MCA., வேலை-I.T., மாதவருமானம்-1,00,000 இந்த மணமகளுக்கு, உயா் கல்வி படித்து சென்னையில் பணிபுரியும் இந்து நாடார் மணமகன் தேவை. தொடர்புக்கு:9865424513. **File No:P-834-G.**

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-திருச்சி, உயரம்-158செ.மீ, நிறம்-சிவப்பு, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, பிறந்ததேதி-1.12.1998, வயது-24, படிப்பு-MCA., Software Engineer., Company Name:Credo Healthcare Systems.,இந்த மணமகளுக்கு, B.E/B.Tech with clean habits, Profession: Either Private / Government மணமகன் தேவை. 9585532891. 8610013431.

| | | | |
|---|---|---|---|
| சனி (வ) | சந் | லக் | |
| கேது குரு | இராசி | | |
| | | | ராகு |
| | சூரி சுக் | புத | செவ் |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | குரு | புத |
| செவ் சனி(வ) | அம்சம் | | |
| சுக் | | | |
| | சூரி | கேது | லக் சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:விளாத்திகுளம்,சித்தவநாயக்கன்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-10.6.1999, நிறம்-மாநிறம், உயரம்-162செ.மீ, ராசி-மேஷம், நட்சத்திரம்-அஸ்வினி, படிப்பு-B.Com.,MBA., இந்த மணமகளுக்கு நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9790749866. 9840056561., File No:M-22-G.

| | | | |
|---|---|---|---|
| | சனி சந்வி | சூரி | புத |
| | இராசி | | சுக் ராகு |
| கேது | | | |
| | லக் | செவ் (வ) | |

| | | | |
|---|---|---|---|
| | வியா | | சந் |
| | அம்சம் | | கேது |
| லக் புதராகு | | | சூரி |
| | | செவ் சுக் | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மடத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.3, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு- B.Com.,MBA., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள அல்லது பெரிய அளவில் தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444416716, 9445073249, File No:-P-989-G

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| லக் | புத | சூரி சுக் | |

| | | | |
|---|---|---|---|
| (வ) சனி | ராகு | (வ) வியா | |
| சூரி சுக் | அம்சம் | | |
| | | | |
| சந் | லக் | கேது | செவ் புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:தண்டுப்பத்து, மேலதெரு, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.2.1986, நிறம்-மாநிறம், உயரம்-5.6அடி, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-B.E.,(Mech)., வேலை-Sri Vasantha Pepot, Hardware., மாதவருமானம்-70,000 பெறும் சொந்தவீடு உள்ளது. இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகள் தேவை. 90031885888, 9884126887, 9600068680.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| லக் வியா | இராசி | | |
| சுபுத சூரி | | | |
| | செவ் சனி | கேது சுக் | |

| | | | |
|---|---|---|---|
| சந் | | | சூரி ராகு |
| | அம்சம் | | சுக் |
| | | | செவ் |
| கேது | | வியா லக் | புத சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பேய்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-20.11.1991, வயது-31, நிறம்-மாநிறம், உயரம்-5.5, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகஷீரிடம், படிப்பு-B.Sc., Computer Science., MCA., CTS., Chennai, மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல குணமுள்ள படித்து நல்ல வேலையிலுள்ள சென்னையில் வசிக்கும் மணமகன் தேவை. 9790798919, 9003263926, File No:M-184-G

| | | | |
|---|---|---|---|
| | | சந் | லக் கேது |
| | இராசி | | |
| சனி | | | வியா |
| ராகு | செ சூபு | | சுக் |

| | | | |
|---|---|---|---|
| கேது | | லக் | |
| | அம்சம் | | செவ் சுக் |
| சனி | | | |
| | | விபு வக்அங் | சூசந் ரா |

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்திய நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாகர்கோவில் | 32 | BE,ME | படித்துநல்லவேலை | 156 | 7339577108 | கும்பம்-அவிட்டம் | P924 | 50பவுன் |
| 2. | திருச்செந்தூர் | 31 | BE | டிகிரிபடித்த-மறுமணம் | 5.4 | 9848101747 | துலாம்-சித்திரை | P925 | மறுமணம் |
| 3. | திருநெல்வேலி | 27 | B.Sc,B.Ed | நன்குபடித்துவேலை | 5.5 | 9940571865 | தனுசு-மூலம் | P926 | நேரில் |
| 4 | தூத்துக்குடி | 25 | MBA | சென்னையில்சொந்தவீடு | 5.5 | 9841358949 | மேஷம்-அஸ்வினி | P927 | 70பவுன் |
| 5 | கோவில்பட்டி | 26 | MA,PGDB,DGT | படித்துவேலை | 155 | 9941753323 | அனுஷம்-விருச்சிகம் | P928 | 20பவுன் |
| 6 | திருநெல்வேலி | 25 | BE | படித்துவேலை/தொழில் | 165 | 9941234954 | ரிஷபம்-கார்த்திகை | P929 | 40பவுன் |
| 7 | திருச்செந்தூர் | 27 | B.Sc | படித்துவேலை-மறுமணம் | 5.3 | 9710526065 | கன்னி-உத்திரம் | P930 | மறுமணம் |
| 8 | கமுதி | 26 | BE | சாப்ட்வேர் வேலை | 5.2 | 9566029307 | கன்னி-அஸ்தம் | P931 | 35பவுன் |
| 9 | சிவகாசி | 25 | B.Sc,MBA | படித்துநல்ல வேலை | 5.4 | 8056343725 | கன்னி-சித்திரை | P932 | 20பவுன் |
| 10 | ஏழாயிரம்பண்ணை | 28 | B.Com | படித்துசென்னையில்வேலை | 5.4 | 9841368606 | கும்பம்-சதயம் | P934 | 30பவுன் |
| 11 | விளாத்திகுளம் | 23 | BBA,MBA | படித்துவேலை | 5.4 | 9176523464 | விருச்சிகம்-அனுஷம் | P936 | நேரில் |
| 12 | அரியநாயகபுரம் | 27 | BE | படித்துவேலை/தொழில் | 5 | 8608066567 | துலாம்-சுவாதி | P937 | நேரில் |
| 13 | திசையன்விளை | 23 | B.Com | படித்துவேலை | 5.5 | 9360738944 | துலாம்-சுவாதி | P938 | நேரில் |
| 14 | காயாமொழி | 24 | B.Sc,B.Ed | படித்துவேலை | 5.3 | 9941950400 | கன்னி-அஸ்தம் | P939 | 35பவுன் |
| 15 | விருதுநகர் | 26 | MBA | படித்துவேலை | 157 | 9894772442 | துலாம்-விசாகம் | P940 | 50பவுன் |
| 16 | விருதுநகர் | 34 | B.Com | நல்லகுணம்நல்லவேலை | 5.2 | 8124275748 | கன்னி-உத்திரம் | P941 | மறுமணம் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | தூத்துக்குடி | 22 | BCA | படித்துவேலை/தொழில் | 5.4 | சென்னை | 9380226169 | 439G | நேரில் |
| | 2 | தூத்துக்குடி | 25 | B.Com | படித்துவேலை/தொழில் | 166 | சென்னை | 9841304992 | 440G | 40+2 |
| | 3 | நாகர்கோவில் | 28 | BE | சாப்ட்வேர் பணி | 5.4 | சென்னை | 9791140776 | 441G | 50பவுன் |
| | 4 | திருநெல்வேலி | 43 | MA,M.Ed,M.Phil | மறுமணம் | 160 | சென்னை | 8056841245 | 442G | மறுமணம் |
| R.C.நாடார் | 1 | கன்னியாகுமரி | 25 | M.Sc | நல்ல பண்புள்ள | 157 | சென்னை | 9940264465 | 347G | நேரில் |
| R.C.நாடார் | 2 | திருநெல்வேலி | 26 | BE | டிகிரிபடித்துவேலை | 173 | சென்னை | 9841315005 | 348G | 40பவுன் |
| R.C.நாடார் | 3 | தூத்துக்குடி | 27 | BE | ஐ.டி/அரசு பணி | 5.3 | சென்னை | 8122835249 | 349G | நேரில் |
| R.C.நாடார் | 4 | திருநெல்வேலி | 23 | BA | படித்துவேலை/தொழில் | 5.4 | சென்னை | 8903461787 | 351G | 50+4 |

நாடார் வரன்களுக்கான நம்பிக்கையான இடம்
இமயம்
திருமண தகவல் மையம்
என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....
இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள்
வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப
வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.



மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்
எண்.1, ஸ்டேசன்ரோடு, சானடோரியம், சென்னை - 600 047.
தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:உமரிக்காடு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-25.10.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5அடி6அங்குலம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு-B.E., (Bio Medical., M.Sc., Counselling Psychology)., வெளிநாடு கம்பெனி, வருடம் வருமானம்-15,00,000பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444126628, 9444648367, File No:M-167-G. e-mail:thiyagaraj.jeyaraman@gmail.com

| | | | |
|---|---|---|---|
| சந்சனி கே | | | |
| | இராசி | | |
| | | | செவ் |
| வியா | மாந் | சூபு லக் | சுக் ராகு |

| | | | |
|---|---|---|---|
| | செவ் ராகு | | |
| | அம்சம் | | |
| சுக் லக் | | | |
| சந் சூரி | | புகே மாந் | வியா சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:தூத்துக்குடி குறுந்தன்விளை, இருப்பிடம்-திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம், பிறந்ததேதி-17.9.1995, நிறம்-மாநிறம், உயரம்-5.2, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிடம், படிப்பு-B.E., Computer Science., இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள டிகிரி படித்து நல்ல வேலையில் உள்ள அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. 7200366727, 7550150236, 7299926727. File No:M-56-G.

| | | | |
|---|---|---|---|
| | கேது | சந் | |
| சனி | இராசி | | |
| | | | சூரி |
| | வியா | செ ராகு | லக்புத சுக் |

| | | | |
|---|---|---|---|
| புதசனி சூரி | கேது | | |
| | அம்சம் | | |
| லக்சூ செவ் | | | |
| | வியா | ராகு | சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:பெருமாள்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-29.12.1995, நிறம்-சிவப்பு, உயரம்-5.6, ராசி-மீனம், நட்சத்திரம்-உத்திரட்டாதி பாதம் 2, படிப்பு-B.Sc., B.Ed., M.Sc., M.Ed., வேலை-K.V. School Teacher., மாதவருமானம்-20,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9940425163, 9123511448 File No:M-163-G.

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| சனி | இராசி | | |
| சுக் | | | |
| புகுரு சூசெ | | | லக் ராகு |

| | | | |
|---|---|---|---|
| கேது சனி | சுக் | குரு | |
| | அம்சம் | | சூரி |
| | | | |
| செவ் புத | | | சந்ரா லக் |

### "ரொக்க பண பரிவர்த்தனை இன்றி டிஜிட்டல் வழிமுறைகள் மூலம் எதுவும் வாங்குவது சாத்தியம்"

M. ஞானசேகர், விவசாய ஆலோசகர், 9566253929.

இன்று பல சிறு நாடுகள் கரன்ஸி அச்சிடுவதை நிறுத்தி டிஜிட்டல் முறையில் அனைத்துப் பண பரிவர்த்தனைகளையும் கொண்டு வந்து விட்டன. வரும் காலம் அனைத்தும் ஆன்லைன் மூலம் நடக்க போகிறது. 2017ம் ஆண்டிலேயே அரசு டிஜிட்டல் வரிமுறைகள் மூலம் ரொக்கமில்லாத வழி முறைகளை ஊக்குவிக்கிறோம் என அறிவித்துவிட்டது. அனைத்து பரிவர்த்தனைகளும் பதிவு ஆவதால் வரி ஏய்ப்பு குறைய வாய்ப்பு உண்டு. பினாமி பெயர்களில் அசையா சொத்துக்கள் வாங்குவது குறையும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

கறுப்பு பணத்தை ஒழிக்க, கள்ள நோட்டு அச்சிடுவதை முடக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இன்று வில்லங்க சான்று பெற ஆன்லைனில் விண்ணப்பித்து கட்டணத்தை வங்கி மூலம் செலுத்தலாம். பத்திரப் பதிவுக்கு முத்திரை தீர்வை பதிவு கட்டணத்தை வணவோலை மூலம் செலுத்தலாம்.

மின் இணைப்பு, கட்டணம், அரசுக்கு கட்டணங்கள், சேவை வரி, விற்பனை வரி என அனைத்தையும் வங்கிக் கணக்கில் இருந்து அனுப்பலாம். வீட்டுக்கு தேவையான எதையும் ஆன்லைனில் புக் செய்து வாங்க முடியும். வீடு, மனை வாங்குவதில் இருந்து எந்த பெரிய தூணையும் கூட ஆன்லைன்/காசோலை மூலம் வாங்க முடியும்.

எனவே இந்திய முடிமக்கள் அனைவரும் வங்கிகளில் அக்கவுண்டு தொடங்க வேண்டும். ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் கணக்கு எழுத வேண்டும். வருமானத்தை மறைக்க கூடாது. அனைவரும் வரி செலுத்த வேண்டும். அரசுக்கு வருவாய் பெரும் பல வளர்ச்சிப் பணிகள் நடைபெறும். (தொடரும்)

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சோழவந்தான் மதுரை மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-16.2.1995, நிறம்-சிவப்பு, உயரம்-167செ.மீ, ராசி-சிம்மம், நட்சத்திரம்-மகம், படிப்பு-M.Arch (SRM)., BIM., Architech., மாதவருமானம்-25,000/- இந்த மணமகளுக்கு, நன்கு படித்த வெளிநாட்டில் வேலையிலுள்ள மணமகன் தேவை. 8939516356, File No:M-35-G.

| | | | |
|---|---|---|---|
| | கேல மா | | |
| சூரி சனி | இராசி | | செவ் |
| புத | | | சந் |
| சுக் | வியா | ரா | |

| | | | |
|---|---|---|---|
| செவ் சனி | புத | லக் | |
| ராகு | அம்சம் | | சந் மாந் |
| | | | கே |
| வியா | சூரி | | சுக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிவஞானபுரம், சேர்வைகாரன்மடம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., MBA., வேலை-பிரான்சு நாட்டு வங்கி, வருடம்:7,05,000வருமானம் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| கே மாந் | | | சந் லக் |
| சுக் சனி | இராசி | | |
| சூரி செவ் | | | |
| புத குரு | | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | சனி | சுக் | சூரி |
| கே மாந் சந் | அம்சம் | | குரு |
| | | | செவ் ராகு |
| | | புத லக் | |

தொடர்புக்கு:9381333339, 9444844884. File No:P-792-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:தென்காசி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-12.1.1996, வயது-27, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-கன்னி, நட்சத்திரம்-உத்ராடம், படிப்பு-M.Com., M.Phil., சிறிதளவு குறை பார்வை உடையவர், இந்த மணமகளுக்கு, நல்ல தொழிபுரியும் சொந்தவீடுஉள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9003229595, 9840273938, File No:M-181-G.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| லக்சுக் சனி | இராசி | | |
| செவ் | | | |
| சூபுத வியா | | | சந் ராகு |

| | | | |
|---|---|---|---|
| லக்சனி சந்கே | செவ் | | வியா |
| | அம்சம் | | |
| | | | |
| சூரி | | சுக் புத | ராகு |





# Velan Kraft House (P) Ltd.

**Raw Material Suppliers To Paper Mills - Since 1972**

**R.Santhana Krishnan Director**



Ad.off:2-C, First Main Road, Shastri Nagar, Adyar, Chennai-600 020.
Mobile: 9840817442, 99625 17442, 80123 17442 E-mail:Velankraft@yahoo.com
Web:www.velankraft.com

# பிறந்த நாள் நினைவு அஞ்சலி 8.7.2023

வி ஜி பி

என்றும் என்
உள்ளத்திலே!



என் வாழ்வின் ஒளி விளக்கே
அன்புத் துணைவியே பிலோமி!
உன் தாய் உள்ளம்
என்னை தாலாட்டியதால்
எட்டிப்பிடித்தேன்
வெற்றிச் சிகரத்தை!

தவமிருந்தேனோ நான்
எனக்காக நீ பிறந்தாயோ!
இன்று உன் பிறந்தநாள்
இதயமதில் வாழ்த்துகின்றேன்
இறைவன் திருவுளத்தோடு!
இருக்கின்றாய் நீ
என்றும் என் உள்ளத்திலே!

உன் அன்புக் கணவன்
வி ஜி சந்தோசம்

# இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் கொளத்தூர் ரவி.




# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

**வெல்க தமிழ்**

"தினத்தந்தி" அலுவலகம் சென்னை லஸ் பகுதியில் இருந்த போது, "பொன்முடி", "வளையாபதி" போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்த நரசிம்ம பாரதி, பெரிய அய்யா சி.பா. ஆதித்தனாரைப் பார்க்க வந்தார்.

"தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டுக் கொண்டே அய்யாவின் அறைக்குள் அவர் நுழைந்தார். அவரைக் கட்டி அணைத்துப் பெரிய அய்யா வரவேற்றார். அப்போது பெரிய அய்யா சொன்னார்கள்-

"தமிழ் வாழும்! இந்த உலகம் உள்ள அளவும் தமிழ் வாழும். ஆனால், தமிழ் வாழ்ந்தால் மட்டும் போதாது. தமிழ் வெல்ல வேண்டும். மூவேந்தர் காலத்தில் போல தமிழ் ஆள வேண்டும். அதற்கு 'வெல்க தமிழ்! வெல்க தமிழ்' என்று முழக்கமிட வேண்டும்!"

இருவருமாக சேர்ந்து "வெல்க தமிழ்! வெல்க தமிழ்" என்று முழக்கமிட்டார்கள்.

'தினத்தந்தி' பொன் விழா கொண்டாடிய போது, சின்னய்யா சிவந்தி ஆதித்தனார் தினத்தந்தியின் முத்திரையாக 'வெல்க தமிழ்' என்ற முழக்கம் நாள்தோறும் இடம் பெறும் என்று அறிவித்தார்.

அப்போது விழா மண்டபத்தில் எழுந்த கர ஒசை கடல் ஒசையையும் மிஞ்சுவதாக இருந்தது!

அது முதல் "வெல்க தமிழ்" என்ற முழக்கத்துடன் 'தினத்தந்தி' வெளிவருகிறது.

(நரசிம்ம பாரதியின் முழக்கத்தையும், சிவந்தி ஆதித்தனாரின் அறிவிப்பையும் காது கொடுத்துக் கேட்டவர், அ.மா.சாமி.)

**கேளாமலே கிடைத்த உதவி**

**-மருத்துவர் ச.தணிகாசலம்**

நாடறிந்த இதய நோய் நிபுணர், டாக்டர் ச.தணிகாசலம், சென்னை ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் இதய நோய்ப் பிரிவுத் தலைவர். இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் இருந்தார்.

ஒரு நேரம் சிவந்தி ஆதித்தனாருக்கு இதயத்துடிப்பு சீராக இல்லை. என்னிடம் வந்தார். மருந்துகள் கொடுத்து சீர் செய்து அனுப்பினேன்.

எனக்கு நன்றி கூற அவர் மீண்டும் வந்தார். "உங்களுக்கு நான் எதாவது செய்ய வேண்டுமே, டாக்டர்! என்ன வேண்டும்? கேளுங்கள்" என்று அவர் கூறினார்.

இதய நோய் வர என்ன காரணம் என்பது பற்றி அப்போது எங்கள் மருத்துவமனையில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தோம். அறிவியல், தொழில்நுட்ப அமைப்பு, இதற்கு நிதி உதவி செய்தார்கள்.

**நீரிழிவு நோய்**

மாரடைப்பு வராமல் தடுக்க நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த வேண்டியது முக்கியம். நீரிழிவு (சர்க்கரை) நோயைக் கட்டுப்படுத்த நமது தமிழ்நாட்டில் பழமையான சித்த வைத்தியத்தில் பல மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. சில சித்த மருந்துகளைப் பயன்படுத்தி சோதனை செய்து கொண்டிருந்தோம்.

பல கிராமங்களுக்குச் சென்று, இதய நோய் ஏன் வருகிறது என்பதை மக்களுக்கு எடுத்துரைத்து வந்தோம். நீரிழிவு நோய் வந்தவர்களை ஆய்வு மையத்துக்கு அழைத்து வந்து, சித்த மருந்துகள் கொடுத்தோம்.

**ஊர்தி வேண்டும்**

இந்த ஆய்வில் ஈடுபட்ட மருத்துவர்கள் கிராமங்களுக்குச் சென்று வரவும், மருத்துவக்கருவிகளைக் கொண்டு செல்லவும், கிராம மக்களை அழைத்து வரவும் பிரத்தியேகமான ஊர்தி ஒன்று வேண்டியிருந்தது. சட்டென்று எனக்கு இது நினைவுக்கு வர, சிவந்தி ஆதித்தனாரிடம் சொன்னேன்.

"நல்ல ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அதற்கு வேண்டிய ஊர்தியை நானே வாங்கித் தருகிறேன்" என்று அவர் சொன்னார்.

மூன்றே நாளில் ஓர் ஊர்தியை (வேன்) வாங்கினோம். 15 பேர் வசதியாக அமர்ந்து பயணம் செய்வதற்கு ஏற்ற ஊர்தி அது. மருத்துவ சோதனைக்கான கருவிகளையும் எடுத்துச்செல்ல முடியும்.

ஊர்தியைக் கொண்டுசென்று சிவந்தி ஆதித்தனாரிடம் காட்டினேன். "இது போதுமா? இன்னும் பெரிதாக வேண்டுமா?" என்று அவர் கேட்டார். "இதுவே போதுமானது" என்று நான் சொன்னேன். (தொடரும்)

# அன்னை மரியின் ஆகஸ்ட் திருவிழா

வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



லீலா ஸ்டீபன்,

தென் தமிழகத்தின் சிறப்புமிகு திருநெல்வேலி மாவட்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ளது வடக்கன்குளம் என்னும் வனப்பு மிக்க ஊர். பண்டுதொட்டே இவ்வூர் ஆன்மீகத்தையும், கல்வியையும் இரு கண்களாகக் கருதிய ஊர். இங்கு பல வழிபாட்டுத்தலங்களும், கல்வி நிறுவனங்களும் ஆன்மீக, கல்வித் தொண்டாற்றுவதைக் காணலாம். பொதுவாக இவ்வூர் மக்கள் பிறருக்கு உதவும் மனிதநேயம் மிக்கவர்களாக திகழ்கின்றனர்.

இவ்வூருக்கு அணிசேர்ப்பது இவ்வூரின் நடுவே அமைந்துள்ள எழில்மிகு திருக்குடும்பத் தேவாலயமாகும். பழமை மிக்க இவ்வாலயம் "பசிலிக்கா" என்றும், சின்ன ரோமாபுரி என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது விண்ணை மேவும் இதன் உயரிய இரு கோபுரங்கள் இதன் உயர்வுக்கு எடுத்துக்காட்டாகும். ஆலயத்தின் உட்சுவர்களிலும், விதானங்களிலும் வண்ணக் கலவைகளால் வரையப்பட்ட ஓவியங்கள் காலத்தால் அழியாதவை, காண்போர் கண்களுக்கு விருந்தாகுபவை. கோவிலின் நான்கு வாயில்களில் நின்று நோக்கினாலும் அன்னையின் பீடத்தைக் காண முடியும். இது தனிச் சிறப்பாகும். இக் கோவிலில் குடிக்கொண்டுள்ள அன்னை "பரலோக மாதா" என அழைக்கப்படுகிறாள். கோவில் வளாகத்துள் இரதவீதி, தேர்ப்பிறை, குருக்களுக்கான பங்களா, கலையரங்கம், உயரிய கம்பீரமான கொடிமரம், மாதா கெபி, தியானமண்டபம், புனித தேவசகாயம் பிள்ளையின் சிற்றாலயம், பாடசாலை ஆகியவை அமைந்து பெருமை சேர்க்கின்றன.

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் திங்கள் 6ம் தேதி முதல் 15ம் தேதி வரை பத்து நாட்கள் அன்னையின் திருவிழா ஆடம்பரமாகக் கொண்டாடப்படும். முதல் நாள் மாலையில் ஊர்மக்கள் புத்தாடை, பொன்னாடைகள், பட்டு ஆடை அணிந்து கொடி மரத்தின் முன்பாக கூடிவிடுவார்கள். பங்குத் தந்தையின் ஆசீருடன் பெரியோர்களால் திருக்கொடி ஏற்றப்படும்.

அனைவரும் ஆரவாரமாய் கைத்தட்டி களிப்பார்கள், திருவழிபாட்டிலும் பங்கெடுப்பார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அமைப்பினர் திருவிழாவைச் சிறப்பிப்பார்கள். தினமும் அதிகாலை முதல் திருப்பலிகளும், நண்பகலில் செபமாலையும், மாலையில் திவ்விய நற்கருணை ஆசீர் என பக்தி முயற்சிகள் நடைபெறும். எட்டாவது திருநாள் பம்பாய் தினமாகக் கொண்டாடப்படும். அன்று ஆயர் வருகை தருவார். சிறுவர்களுக்கு முதல் திருவிருந்து வழங்கப்படும். நண்பகலில் விருந்து அளிக்கப்படும், மாலையில் ஆயர் தலைமையில் "நற்கருணை பவனி" நடைபெறும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் அந்தந்த அமைப்புகளால் திருவிழா சிறப்பிக்கப்படும். பகலில் விளையாட்டுப் போட்டிகள், ஏழைகளுக்கு ஆடை, தையல் எந்திரம் போன்றவை வழங்குதல், அன்னதானம் இவை நடைபெறும். வெளிஇடங்களில் வாழும் மண்ணின் மைந்தர்கள் திருவிழாவைக் காண வருகை தருவார்கள். தினமும் இரவில் மக்களை மகிழ்விக்கும் விதமாக பாட்டுக் கச்சேரி, ஆடல்பாடல், நாடகம், பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கோவில் பல வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, அவற்றின் வர்ண ஜாலங்கள் காண்போரைக் கவரும். கோவிலைச் சுற்றி பலவித மிட்டாய்க் கடைகள், விளையாட்டுப் பொருட்கள், மகளிருக்கான அலங்காரப் பொருள் கடைகள் போன்ற பலவித கடைகள் அமைக்கப்பட்டு மக்கள் வேண்டியவற்றை வாங்கி மகிழ்வார்கள். திருவிழாக் காலங்களில் சிறுவர் முதல் பெரியவர் வரை புத்தாடை அணிந்து மகிழ்வார்கள். குறிப்பாக மகளிர் பல வண்ணபட்டுக் கட்டி, பொன் நகைகள் அணிந்து, தலையில் பூ முடித்து கோவிலுக்கு வரும் அழகே தனியழகுதான்.

ஒன்பதாம் நாள் இரவு அன்னையின் தேர்ப்பவனி ஆரம்பமாகும். அச்சமயம் அன்னையின் திருச்சொரூபத்திற்கு நேர்த்தியானப் பட்டாடை போர்த்தி, பொன்நகைகள் அணிவித்து, தலையில் தங்க மகுடம் அணிவித்து தேருக்குள் எழுந்தருளச் செய்வர். மக்கள் வெள்ளத்தில் ஆரவாரத்துடன் தேர்பவனி வரும். தேர் இதர வீதிக்கு வந்ததும் ஒவ்வொரு சந்தியிலும் தேர் நிறுத்தப்படும். அச்சமயம் பக்தர்கள் குழுமி நின்று வழிபடுவார்கள். தேரில் உப்பு மிளகு தூவுவது வழக்கம். பூமாலைகளையும், காணிக்கைகளையும் அன்னைக்கு அர்ப்பணித்து ஆசீ பெறுவார்கள். அப்போது ஊர் அன்பர் விடியவிடிய அன்னதானமும், தண்ணீரும் வழங்கி சிறப்பிப்பார். மறுநாள் அதிகாலையில் தேர் இருப்பிடம் வந்தடையும். திருப்பலிகள் வலமொழிகளில் நடைபெறும். பக்தர்கள் தேரில் காணிக்கையும், நேர்ச்சைப் பொருட்களையும் செலுத்துவார்கள். தேரில் உப்பு, மிளகு, நூல் போன்றவைப் "புதுமைப்" பொருளாகப் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

ஆகஸ்ட் 15 பத்தாம் திருநாள் அது மாதாவின் விண்ணேற்ற நாளாகும். மேலும் நம் நாட்டின் சுதந்திர தினமும் ஆகும். இரு விழாக்களும் சிறப்பிக்கப்படும். சுதந்திர தேசியக்கொடி ஏற்றிக் கொண்டாடுவார்கள். அன்று நண்பகல் மூன்று மணிக்கு முதல் நாள் பார்க்க இயலாதவர்களுக்கு வசதியாக தேர்ப்பவனி நடைபெறும். மாலை ஆறு மணிக்கெல்லாம் தேர் இருப்பிடத்தை வந்தடையும். நற்கருணை ஆசீருடன் திருவிழா நடைபெறும்.

திருவிழா நாட்களில் மக்கள் வீடுகளில் அறுசுவை உணவு சமைத்து உறவினரோடு உண்டு மகிழ்வார்கள். அதுமட்டுமல்லாது நமது மத்தியில் உள்ள ஏழைகள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவி செய்தல் வேண்டும். இதுவே நமது திருவிழாக் கொண்டாட்டத்தின் உண்மையான மகிழ்ச்சி ஆகும்.

அன்னையின் ஆசீர் அனைவருக்கும் பெறுக!!!


உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?

Prop.K.A.Raman Nadar

Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.

106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com

# உறவுகள்!

**சில பிரபலங்கள் உறவுகள்**

**5.பில் கேட்ஸ் (மைக்ரோசாஃப்ட் இணை நிறுவனர்)**

"வெற்றி ஒரு கவர்ச்சிகர ஆசான். நீங்கள் தோற்கவே முடியாது என திறமைசாலிகளை அது வசீகரிக்கிறது"

**6.ஸ்டீவ் ஜாப்ஸ் (ஆப்பிள் இணை நிறுவனர்)**

"உங்கள் காலம் குறுகியது. எனவே இன்னொருவரின் வாழ்க்கையாக வாழ்ந்து அதனை (காலத்தை) வீணடிக்காதீர்கள்".

**மனிதாபிமான உறவு**

மனித உறவுகளை நாடு தழுவிய அளவிலும், அதற்கு அப்பாலும் பேணிக் காத்த மாபெரும் அரசியல் ஞானி, மனிதாபிமான வித்தகர் மறைந்த பெருந் தலைவர் காமராஜர். இந்திய அரசியல் மற்றும் சமூக வரலாற்றில் காந்தி, நேருவுக்குப் பிறகு மூன்றாம் இடம் பிடித்த தேசியத் தலைவர் காமராஜர். வடக்கே பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து, இங்கிலாந்தில் கல்வி பயின்று, இந்திய விடுதலைப் போராட்டத்தில் குதித்து, வாழ்வின் முக்கியப் பகுதியைச் சிறையில் கழித்து, உடல், பொருள், ஆவியை தேசத்துக்காகத் தந்து, விழுப்புண்கள் ஏற்று, நாட்டின் முதல் பிரதமராகவும் பதவி வகுத்த, படித்த மேதை பண்டித ஜவகர்லால் நேரு.

தெற்கே, தென் தமிழகத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, பள்ளிப் படிப்பைப் பாதியில் முடித்து, நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் குதித்து, சிறை புகுந்து, திருமணம் செய்து கொள்ளாத பிரம்மச்சாரியாக, தியாக சீலராக, தேசப் பிதா காந்தியின் சீடராகத் தொண்டாற்றி, சுதந்திர இந்தியாவில் தமிழகத்தின் முதலமைச்சராகத் தொடர்ந்து மூன்று முறை, அதாவது 1954 முதல் 1963 வரை 9 ஆண்டுகள் பதவி வகுத்து, கல்விக் கூடங்கள் கட்டி, அணைகள் கட்டி, தொழிற்சாலைகள் கட்டி, கல்வி வளர்த்து, விவசாயத்தைப் பெருக்கி, தொழில்களை வளர்த்து, நெறி தவறா ஆட்சி நடத்தி, நேரு கேட்டுக் கொண்டதின் பேரில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்று, காமராஜ் திட்டத்தின் கீழ் முன்னதாக, தமிழக முதலமைச்சர் பொறுப்பிலிருந்து தாமே முன்வந்து விலகி, மத்தியில் நேரு மறைவுக்குப் பிறகு 1964-லிலும், 1966-லிலும் இரண்டு முறை தாமே இந்தியப் பிரதமர் ஆகும் வாய்ப்புத் தம்மைத் தேடி வந்தபோதும் தட்டிக் கழித்து, 1964-ல் லால் பகதூர் சாஸ்திரியையும், 1966-ல் நேரு மகள் இந்திரா காந்தியையும் இந்தியப் பிரதமர்கள் ஆக்கிய "கிங் மேக்கர்" ஆகத் திகழ்ந்தப் படிக்காத மேதை காமராஜர்.

குஜராத் மாநிலம் போர்ப்பந்தரில் பிறந்து, இங்கிலாந்தில் சட்டப் படிப்பை முடித்து, தென் ஆப்பிரிக்காவில் சிலகாலம் வாழ்ந்து, அங்கு இனவெறி எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி, இந்தியா திரும்பிய பிறகு, நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி, சிறை தண்டனைகள் அனுபவித்து, உண்மையையும், அஹிம்சையையும், வாழ்வில் உயிர்மூச்சாய்க் கொண்டு வாழ்ந்த உத்தமர் காந்தியோடும், இந்திய விடுதலைப் போரில் பல தியாக சரித்திரங்கள் படைத்து, சுதந்திர இந்தியாவின் பிரதமர் ஆகி, உலகத் தலைவர்கள் கென்னடி, குருசசேவ், நாசர் போன்றவர்களோடு கைகோர்த்து நடந்த நேருவோடும் அரசியல் பணியாற்றி, வரலாற்றில் அவர்களோடு வைத்துப் போற்றப்படும் காமராஜர் தென் தமிழகத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர். எளிமையும், நேர்மையும் அவரின் அடையாளர்கள்.

தமிழகத்தின் முதலமைச்சராக அவர் பொறுப்பேற்றவுடன் முன்னதாக மூதறிஞர் இராஜாஜி அமுல்படுத்தியிருந்த குலக்கல்வித் திட்டத்தை அகற்றிவிட்டு, கல்வித் துறையில் மாபெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தார். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தொடக்கப் பள்ளி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு உயர்நிலைப் பள்ளியை உருவாக்கினார். 11-ம் வகுப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்தை அமுலாக்கினார். காமராஜர் கொண்டு வந்த பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டம் உலகில் வேறு யாரும் அதற்கு முன் செய்திராத முதல் திட்டம் என்றும் கூறப்படுவதுண்டு. அவர் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தபோதுதான் பல புதிய அணைகள் கட்டப்பட்டு, புதிய கால்வாய் இணைப்புகள் உருவாக்கப்பட்டன. (தொடரும்)



Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277
ஆர்த்தி பிராய்லர்ஸ்
77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.



செல்:9444484977, 9962454977, 044-25980239.
ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்

ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்
ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.
ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும். நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை


S.ராஜையா நாடார்
சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்
எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்
168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு,
(அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29
போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**சிகண்டியின் திகைப்பு..**



தன் எதிரில் அமர்ந்திருந்த திரவுபதியை பார்த்தான் சிகண்டி.. பாவம்..

அவளது கண்கள் கலங்கியிருந்தன.. சிவந்திருந்தன.. கண்ணீரை சுரந்து நின்றன.. அழுதாள் அவள்.. சத்தமின்றி.. மவுனமாக..

சிகண்டியும் கூட.. கலங்கினான்.. அதை பார்த்து..

அவனுக்கு அவள் உடன் பிறந்த தங்கை இல்லை தான்..

யாக குண்டம் என்பது அவனது தாயின் மடி இல்லையே.. என்றாலும் கூட.. அதாவது ரத்த உறவு.. அவர்களுக்கிடையே இல்லையென்றாலும் கூட..

அண்ணா என்று அவனை அழைப்பவள் அவள்.. வாய் நிறைய.. மனம் நிறைய.. செவி குளிர..

அப்படிப்பட்டவள் தன் எதிரே வந்து கண்ணீர் சிந்துகிறாள் என்றால்.. தாங்க முடியுமா அவனால்..

எனவே.. விவரம் கேட்டான்.. பரிவோடு..

ஏனம்மா அழுகிறாய்.. அழுதபடியே சொன்னாள் அவள்..

இன்று காலையில்தான் அண்ணா.. நம் தந்தை அவர்கள் என்னிடம் வந்தார்..

என்ன சொன்னார்..

அந்த பாண்டவர்கள் ஐந்து பேரையும்.. நான் ஒருத்தியே மணந்து கொள்ள வேண்டுமாம்..

ஏன் அண்ணா..

நான் என்ன பண்டமா.. அல்லது பாத்திரமா.. வைத்த இடத்தில் உட்கார் என்று சொல்லுவதற்கு..

நான் படைக்கப்பட்டது எதற்காக என்பது எனக்கு தெரியும்.. அந்த வகையில்.. எனது கடமை என்ன என்பதும் எனக்குத் தெரியும்..

அதற்காக என்னை ஒப்படைக்கும் விசயத்தில் நீங்கள் இவ்வளவு அலட்சியம் காட்ட வேண்டுமா..

இப்படி சொல்லிக் கொண்டிருந்த போதே.. வெடித்து சிதறினாள் திரவுபதி..

அதை பார்த்ததும்.. அவளை கையெடுத்து கும்பிட்டான் சிகண்டி.. கெஞ்சிய குரலில் அவளிடம் வேண்டினான்..

வேண்டாம் திரவுபதி.. தயவு செய்து இதற்கு மேலும் நீ அழ வேண்டாம்.. என் மனம் தாங்கவில்லை என்றான்..



ஆனால் அவன் அப்படி சொன்னப்பிறகும் அவள் அழுதாள்.. அழுதபடியே கூறினாள்..

நான் அழவில்லை அண்ணா.. என் மனம் அழுகிறது.. என்னை மீறி அழுகிறது.. என் வேதனையின் எல்லை.. இப்போது எனக்கே புரியவில்லை..

அப்போதும் அவளை ஆறுதல் படுத்த முயன்றான் சிகண்டி.. உன் வேதனை எனக்குப் புரிகிறது திரவுபதி..

ஆனாலும் நீ அழக்கூடாது.. ஏன் தெரியுமா.. அரசகுல பெண்களுக்கு இப்படியெல்லாம் அழக்கூடிய உரிமை கிடையாது..

அப்படியானால்.. நீயே அதற்கொரு கரையை ஏற்படுத்து அண்ணா.. அல்லது ஒரு அணையை கட்டு.. சத்தியமாக சொல்லுகிறேன்.. என்னால் முடியவில்லை..

துயரம் அவளையும் மீறி நிற்கிறது என்பதை புரிந்து கொண்டான் சிகண்டி.. ஆனாலும் கேட்டான்..

ஒரு விசயம் தெரியுமா உனக்கு..

என்ன அண்ணா..

ஏற்கனவே நம் தந்தை அவர்களுக்கு நீ கடமைப் பட்டவன்..

அதுதான் தெரியுமே..

ஆமாம்..

இப்போது கடன் பட்டும் நிற்கிறாய்..

நம் தந்தைக்கா..

நம் தந்தைக்கு மட்டுமல்ல.. குந்திக்கும் பாண்டவருக்கும் கூட..

எப்படி..

அவர்கள் மூன்று பேருமே.. உன் எதிரே இன்று கை ஏந்தி நிற்கிறாள்..

இந்த திருமணத்துக்கு நீ சம்மதித்துதான் ஆக வேண்டும்.. இல்லையென்றால்..

நம் தந்தைக்கும் குந்திக்கும் நாடு கிடைக்காது.. பாண்டவர்களுக்கு ஆட்சி கிடைக்காது..

மிகவும் மனம் நொந்தவளாக கேட்டாள் திரவுபதி..

என்னண்ணா நீயும் கூட இப்படி பேசுகிறாய்.. என்னை வென்றவர் யார்..

அர்ச்சுனன் மட்டும்தானே.. இதில் மற்றவர்களுக்கு ஏது உரிமை.. எனக்கு அவர்கள் அந்நியர்கள்தானே..

உண்மைதான்.. ஆனாலும் இந்த அனுபவம்.. இன்று உனக்கு மட்டும்தான் ஏற்பட்டிருக்கிறது என்று நீ நினைக்கக் கூடாது திரவுபதி (தொ ரும்)


விலைகுறைவு! R.Suresh Ph: 2226 6961, 22266962 மனநிறைவு!

AMUTHA & CO



Sony, L.G, TCL, SamSung, Onida, Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar, Kelvinator, Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells



1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.

விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம்
திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம்
பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர்,
செல்:9486555373, 8610212126.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



20."சார்.... தபால்!" தபால்காரர் வீசி எறிந்துவிட்டுப் போன அஞ்சல் உறையினை ஓடிப்போய் எடுத்து வந்தாள் சுஜாதா.

"அது என்ன கடிதம்?" அனிதா கேட்டாள்.

"உள்நாட்டுக் கடிதம் தான்." சிரித்தாள்.

"விட் அடிக்காதே. யார் எழுதியது என்று பார்...." அனிதா அருகில் வந்தாள்.

"அதைத்தான் பார்க்கிறேன். அனுப்பியவரின் முகவரியே இல்லை." சுஜாதா.

"சரி, நமக்குள் ஒரு பந்தயம்..." அனிதா.

"என்ன?"

"கடிதத்தைப் பிரிக்காமலேயே இது யாரின் கடிதம் என்று கண்டுபிடிக்கவேண்டும்."

அனிதா..

"ஓ........! கடிதத்தில் எழுதப்பட்ட முகவரியினைப் பார்த்துத் துருவினாள்.

"அண்ணியின் கடிதமோ......?"

"நீ சொல்லாதே. நான் கண்டுபிடிப்பேன்"

"என்னடீ பெண்களா கண்டுபிடிக்கப்போகிறீர்கள்?" அம்மா அங்கு வந்து சேர்ந்தாள்.

"கடிதம் வந்திருக்கிறதம்மா........."

"இதற்குத்தானா? பிரித்துப் படி"

"பிரிப்பதற்கு முன் எங்களுக்குள் ஒரு பந்தயம்?"

"என்ன டீ பந்தயம்?"

சொன்னார்கள்.

"அதெல்லாம் நீங்கள் ஏன் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்? நானே சொல்லிவிடுகிறேன். எங்கே...........கொண்டுவா பார்க்கலாம்..."

சுஜாதா முனகியபடியே அம்மாவிடம் கடிதத்தைத் தந்தாள்.

அம்மா வாங்கிப் பார்த்தாள். முகவரியிலுள்ள எழுத்துக்களின் சாய்ந்த கோடுகள் அது தன் மகன் ரகுவரனின் எழுத்துக்களே என பளிச்செனச் சொல்லியது.

சொன்னாள்.

பிரித்துப் பார்த்தார்கள்.

அவன்தான்...

ரகுவரன் தான் எழுதியிருந்தான்.

"என்னைப் பழிவாங்க வேண்டுமெனக் காத்திருந்து என் காதலை அழித்து, காதலியை விரட்டி, கல்யாணம் என்ற பெயரில் ஒரு நெஞ்சழுத்தக்காரியை.... ஒரு ஏமாந்தவளை.... எனக்குப் பிடிக்காதவளை என் தலையில் கட்டிய அப்பா, அம்மா என்ற இருபேருக்கும் ரகு எழுதிக் கொள்வது..."

அதற்குமேல வாசிக்காமல் அனிதா அம்மாவைப் பார்த்தாள். அம்மாவின் கண்களில் அதிர்ச்சியும், குழப்பமும் தெரிந்தன.

"கேட்டியா அம்மா உன் மகன் மனதில் இருக்கும் வஞ்சகங்களை.....?"

"நான் ஒவ்வொரு நேரமும் அவனைப்பற்றி என்னென்ன கணக்குப் போட்டேனோ...அந்தக் கணக்குகளில் இம்மியும் பிசகாமல்தான் இருந்திருக்கிறான்.!"

"............"

"அனிதா சொன்னானே...! அண்ணன் நடிக்கிறான். அண்ணியின் வேலையை விட்டால் சிக்கல் வரத்தான் வரும் என்று சொன்னாளே...!" சுஜாதா வருத்தம் தோயச் சொன்னாள்.

"சரி, கடிதத்தைப் படித்து முடி..." அம்மா அனிதாவைத் தூண்டினாள்.

"நீங்களெல்லாம் ஒரு மவுனக் கூடு கட்டி, அந்தக் கோட்டிற்குள் நின்று, என்னை எப்படி வெல்லலாம் என்பதில் தீரமும் தீவிரமும் காட்டினீர்கள். என்னை உயிருக்குயிராய்க் காதலித்த திவ்யாவைத் திறமையாக எனக்கு எதிராகத் திருப்பிவிட்டீர்கள். அப்பொழுது நான்பட்ட அவமானம்.... ஏமாற்றங்கள் எப்படிப்பட்டவை என்பது உங்களுக்குத் தெரியாது.

நான் யார்...?

என் மனதில் ஒன்றை நினைத்தால் அதை முடிக்காமல் விடுவேனா..........?

காத்திருந்தேன்.

நாடகம் தயாரித்தேன். நடித்தேன். அந்தப் பைத்தியம் சாவித்திரியின் மீது அன்பைக் கொட்டுவது போல் பாவனைகள் செய்தேன். இயல்பில் நெஞ்சழுத்தம் நிறைந்த அவளை அன்பால் மட்டுமே வெல்ல முடியும் என்ற கணிதத்தைத் தெரிந்து,சரியாகக் காய்களை நகர்த்தினேன்.

அவள் என் நடிப்பில் மயங்கினாள். மயங்கி வீழ்ந்தாள். எனக்காக எதையும் இழக்கும் நிலைக்கு அவளைக் கொண்டு வந்தேன். வேலை ஒன்று இருந்ததால்...தன் வீட்டோடு... அல்லது உங்களோடு தங்கினால் என் வன்மம் தீராதல்லவா...? அவளில்லாமல் நான் நிமிட நேரங்கூட வாழமாட்டேன் என சாகசமாய்ப் பேசினேன். இடையில்தான் எத்தனை தடங்கல்கள்...? நீங்களும் அவளும் என் நடிப்பில் நன்கு அயர்ந்துவிட்டபின்னும் அனிதா மட்டும் விழித்துக் கொண்டேயிருந்தாள் என்பது போல் ஒரு ஐயம். அவளின் பேச்சு எடுபடாமலிருக்க அந்த ஏமாளி சாவித்திரியிடம் நான் எவ்வளவோ கவனமாய்... கணிசமாய் நடித்தேன்... நடந்தேன். வெற்றியும் பெற்றேன். சென்னை வந்தேன். ஒரு ஒதுக்குப் புறத்தில் அவளை இருத்திவிட்டு, என் வேலையை நான் ராஜினாமா செய்தேன். என் திவ்யா எங்கிருக்கிறாள் என்பது எனக்கு மட்டுமே தெரியும். அவளைத் தேடிநான் புறப்பட்டுவிட்டேன். இனி அந்த உங்கள் மருமகள், சென்னையில் பட்டினியால்... பசியால்... தன் உடலை விற்பதற்கு அல்லது தற்கொலை செய்து கொள்வதற்குத் தான் முன் வந்தாக வேண்டும்.

ஏனென்றால்... அவளின் நகைகள் அனைத்தையும் நானே எடுத்துக்கொண்டு போகிறேன். இனி அவள் யாரைத் தேடியும் போகமாட்டாள். நெஞ்சழுத்தமுள்ள அவளையும் நம் வீட்டிற்கு வரவோ, நம் சொத்தில் சொந்தம் கொண்டாடவோகூடாது என அவளின் சுய கவுரவத்தையே அவளைச் சுற்றிக் கட்டுக்கயிறுகளாக்கினேன். எனவே அவள் நம் வீட்டிற்கு வரவே மாட்டாள்.

அவளைப் பெற்ற தகப்பனையும், சகோதரனையும் எடுத்தெறிந்து பேசிவிட்டே வேலையை விட்டவள் அவள். எனவே அங்கும் போகமாட்டாள்.

முடிவில்... சென்னையில் அவள் சின்னாபின்னமாவாள்.அந்த சேதி வந்தபின்பு நான் என் அன்புக் காதலி திவ்யாவை எப்படியாவது சமாதானப்படுத்தி, என் மனைவியாக்குவேன். அதற்குப் பின்பே நான் ஊருக்கு வருவேன்.

ஊருக்கு நான் வருவதை நீங்கள் தடுக்கமாட்டீர்கள். ஏனென்றால் நான் உங்களின் ஒரே வாரிசு. எந்தத் தாயாவது, தந்தையாவது தன் வாரிசை இழக்க விரும்புவார்களா? பிரிவும், இடைவெளியும் உங்களுக்குள் புத்திர சோகத்தை ஏற்படுத்தும் காலம் அறிந்து நான் வருவேன். அப்பொழுது "மகனே" என்ற ஏக்கத்தோடு அழைத்து ஏற்றுக் கொள்வீர்கள் என்பதை நானறிவேன்.

எது எப்படியானாலும் நீங்களும் நானும் வேறுவேறல்ல. இடையில் வந்து இடையிலேயே போகும் சாவித்திரியைப் பற்றி இனி நீங்கள் நினைப்பதை விட்டுவிடுங்கள்.

கடிதத்தில் தான் நினைத்ததை விவரமாய் எழுத முடியும் என்பதால் கடிதம் எழுதியுள்ளேன்."        - ரகுவரன்"

கடிதத்தைப் படித்து முடித்ததும் அனிதா விம்மி விம்மி அழுதாள். சுஜாதாவும் சேர்ந்து கொண்டாள்.

அம்மா இடிந்து போயமர்ந்துவிட்டாள்.

அப்பா அப்பொழுதுதான் வந்தார். எல்லோரும் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு கண்ணீர்க்கோலத்துடன் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவருக்கு பயம் கவ்வியது. நிதானத்தை மனதில் வருவித்தார். மெல்ல அவர்களுக்கருகில் சென்றார். அவரைக் கண்டதும் அம்மா "ஹோ" வென்று ஓலமிட்டாள்.

"நம் தலையில் கல்லைத்தூக்கிப்போட்டுவிட்டுப் போய்விட்டானே என் வயிற்றில் பிறந்த பாவீ.....! என்று தலையிலடித்துக் கொண்டாள். பெண்களிருவரும் வெளியில் ஓசை எழாமல் விம்மினார்கள்.

மவுனமாய்க் கடிதத்தை வாங்கினார் அப்பா.

படித்தார்.

நெஞ்சுக்குள் "சுரீர் சுரீர்" என உண்மைகள் சுட்டன. அவனையும் அவளையும் ரயிலடியில் கொண்டுபோய் வழியனுப்பிவிட்டு வந்தபோது நிதர்சனமாய் அனிதா சொன்ன வார்த்தைகள் நினைவுத்திரைக்கு வந்து நிழலாடின.

சின்னப் பெண்ணாயிருந்தாலும் இவளுக்குள்ளிருந்த அறிவும்... ஆழ்ந்த ஊடுருவலும் நமக்கு இல்லாமல் போய்விட்டதே என்ற ஆதங்கம்... வேதனை அவரை அரித்தெடுத்தது.

"சரி, சரி சனியன் ஒழிந்தது. ஒழிகின்ற சனியனை நிறுத்தி வைத்தால் மட்டும் நின்று விடுமா? யாரும் அழ வேண்டாம். அழக்கூடாது!" அப்பாவின் குரலில் என்றுமில்லாத கண்டிப்பு மிகுந்திருந்தது. அனைவரும் அழுகையை நிறுத்திவிட்டு அப்பாவை நோக்கினார்கள்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" அப்பா இரைந்தார்.

எல்லோரும் தலை கவிழ்ந்தார்கள்.

"ஏன் எல்லோரும் தலையை தொங்கவிட்டுக் கொண்டீர்கள்? இப்பொழுதென்ன குடியா முழுகிவிட்டது?"

"இதற்கு மேலும் முழுகிப் போக என்னங்க வேண்டும்...? அம்மா சற்றே ஆத்திரத்துடன் கேட்டாள்.

"பிள்ளை இறந்துவிட்டால் பெற்றவர்களும் செத்துவிடுவதுதானா?" அப்பா திருப்பி கேட்டார். "இறந்தால் பிணமாவது முன்னே கிடக்கும். பார்த்துப் பார்த்து அழுதாவது ஏற்றுக் கொள்ள மனம் பக்குவப்படுமில்லையா?

"ஓ... கோ....! பிணத்திற்கு பதிலாகத்தான் கடிதம் இருக்கிறதோ......?

"ஆமாம்! உயிரோடு போய்விட்ட உங்கள் பிள்ளையாக இந்தக் கடிதத்தை வைத்து மயான அழுகைதான் அழுகிறோம்"

"சரி, அழுங்கள்." ஆனால் ஊருக்குத் தெரியாமல் அழுங்கள். சொல்லிவிட்டு நகர்ந்துபோன அப்பா தன் அறைக்குள் போய் கதவை சாத்திக் கொண்டார்.

அவருக்குள் தன் மகன் முரண்பட்டுப்போய் ஒரு பெண்ணை மணக்க எத்தணித்தான்? அதைத் தடுத்து, அவனிடமுள்ள பணம், சொத்து, அந்தஸ்து, ஆடம்பரமெனும் பலகீனங்களையே தாம்புக்கயிறாக்கி அவனது வைராக்கியம் எனும் மாட்டைக் கட்டி, கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்ததும், கல்யாணம் முடிந்த மறுநாளிலிருந்தே அவன் குடிப்பதும், வீட்டை, மனைவியை, தங்களை விட்டு விலகுவதுமாய் போகத்தலைப்பட்டதும், அவனுக்கு மனைவியாய் வாய்த்த குலக்கொடி சாவித்திரி சத்தியவானுக்கு வாய்த்த சாவித்திரியே போல் அவனுக்காக எல்லாவற்றையும் தாங்கி, எல்லாவற்றையும் ஏற்று வேலையையும், பிறந்த வீட்டார்கள் சொல்லையும் உதறிவிட்டு நம்பிக்கையை மட்டுமே மனதில் நினைத்துக் கொண்டு போனாளே... அந்தப் பிரயாணமும் மனக்கண்களில் வந்தன.

"அய்யோ... நான்தான் எல்லாவற்றிற்கும் மூலகர்த்தா! என் கவுரவம்..என் பிடிவாதம்... என்று எல்லா பிடிமானங்களும் என்னைவிட்டு அவன் கைக்குப் போகவைத்த முட்டாள் நான்!

அந்தப் பெண்...? கடவுளே... அழகுக்கு அழகு...! படிப்பிற்கு உயர்ந்த படிப்பு...! அறிவு.... அடக்கம்... அன்பு அனுசரித்துப்போகும் பண்பு...ஓ.....! எல்லாம் என்னால்தான்...! அந்த மணமிகுந்த மலரை, அடுத்த வீட்டில் வாசம் துலங்க மலர்ந்திருந்ததைப் பறித்தெடுத்து வந்து இந்த வீட்டில் நடைக்கழியில் போட்டுக் காலால் மிதித்து கசக்கிப் போடவந்த பாவி நான்! என்று தலையிலடித்து அடித்து அழுதார்.

இனி என்ன செய்வது என்ற எண்ணம் அவருக்குள் மாமலையாய் நின்று மலைப்பை உண்டாக்கியது.

அப்படியே படுக்கையில் கவிழ்ந்தார்.

"அப்பா...அப்பா...!" கதவருகே நின்று அனிதா கூப்பிடும் ஒலியில் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தார். சுவரில் தொங்கும் கடிகாரம் ஒரு மணியைச் சொன்னது.

இவ்வளவு நேரமா கண்ணயர்ந்தோம்...?

பகல் பொழுதுகளில் கண்ணயர்ந்தே பழகியிராத தனக்குள்ளா இத்தனை நேரத்தூக்கம்...? கண்களை கசக்கிவிட்டுக் கொண்டார். மிதமிஞ்சிய துக்கமும், மிதமிஞ்சிய வேலையும் கூட மனிதனை ஒரு அளவிற்கு மேல் இயங்க முடியாத நிலையில் நன்றாகக் கண்களைக் கட்டி தூக்கமோ... மயக்கமோ...இரண்டுமற்ற...இரண்டிற்கும் மிகமிக நெருங்கிய ஒரு கிறக்கத் திலாழ்த்திதான் விடுகின்றன என்ற நிதர்சனத்துடன் வாயிலை நோக்கினார்.

அனிதா நின்றிருந்தாள்.

"அம்மா அனிதா.."

வந்தாள்.

"என்னப்பா....?"

அண்ணி இப்பொழுது எங்கிருப்பார்கள்...? என்ன செய்வார்கள்...?"

..............."

"நகைகளிருந்தாலாவது ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். அதையும் இவன் கொண்டு போய்விட்டாணாமே.. எப்படி அண்ணி சமாளிப்பார்கள்....?"

"எனக்கும் அதுதானம்மா கவலை..."

"ஒருவேளை அண்ணி தற்கொலை செய்துகொள்வார்களோ....?"

"இருக்காது......இருக்கக்கூடாது! நிச்சயம் உங்கள் அண்ணி அப்படி ஒரு முடிவிற்குப் போகமாட்டாள்."

"எதைவைத்துச் சொல்கிறீர்கள்?"

"அவள் ஒரு முழுமையான பெண். பெண்மையின் முழு அம்சங்களுக்கு அவளுக்கும் உண்டு. அப்படிப்பட்டவளால் துன்பத்தையும், இன்பத்தையும் சமமாகப் பார்க்கவும்... பாவிக்கவும் முடியும். அவள் இன்பத்தில் எக்காளமோ... துன்பத்தில் துவளுதலோ இல்லாதவள். பிறருக்காகத் தன் இன்பத்தைத் துறக்க முடிந்த அவளுக்குள் இருக்கும் நெஞ்சுறுதியும், வீரமும் வேறு யாருக்கும் வராது. நிச்சயம் அவள் அந்தப் பாவியின் துரோகம் குறித்துத் துடித்தெழுவாளே தவிர துவண்டு போயிருக்கமாட்டாள்!"

"அப்பா...!"

"என்னம்மா?"

"நானும் கூட அப்படித்தானப்பாநினைத்தேன்."

"நீ நினைத்தாயல்லவா.. அப்படியானால் அதுதான் சரி"

"அண்ணியைத் தேடிப் போகவேண்டாமா?"

"போக வேண்டும். ஆனால் முகவரி தெரியாதே...!" அகலமாய்க் கைவிரித்தார்.

"எப்படியோ அவர்களைப் போய் பார்த்தாக வேண்டுமேப்பா....!"

"பார்ப்போம். பார்க்கலாம். அதற்கு முன் நான் ஒரு முக்கியமான நபரைச் சந்தித்தாக வேண்டும்!" எழுந்து பரபரப்புடன் புறப்பட்டார்.



# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்

நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம்
எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர்

மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்)
வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.

---

**முகவரி: எண்:389, T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-184),**
**திருவொற்றியூர், சென்னை-19.**
**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**
**நிறுவனர்- ஆர்.சத்தியவான், நாகர்கோவில்- 9444247847.**
**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 9789848995.**



**R.Sridharan**
**S.Lokeshwaran**
**Proprietor**
**9514591000**
**9514592000**



# Thangam Metal Marts










20-B, Velachery Main Road, Chennai-42

திருமணப்பட்டு
ஜவுளிகளுக்கு.........
ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1. போன்: 2622647, 2666666.
தொட்டுத் தொடரும் ஒரு
பட்டுப் பாரம்பாரியம்.


# உன் சிந்தனை உனது வெற்றி



- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**

**தடைக்கற்களை தரைமட்டமாக்கு**

யானையைப்போல் கனத்த, பெரிய உடலைப் பெற்றுள்ள விலங்குகள் பெறாத வெற்றியை, புலியைப்போல் ஒரே பாய்ச்சலில் யானையையும் வீழ்த்தக்கூடிய ஊக்கத்தைப் பெற்றுள்ளது கொடிய விலங்குகள் பெறாத வெற்றியை, இந்த அம்சங்கள் எதையுமே பெறாத மனித இனம் பெற்றிருக்கிறது.

இந்தப் பூமியின் ஆதிக்கத்தை தன் கையில் வைத்திருக்கிறது. அதற்கு ஒரே காரணம், மனிதனிடம் எப்போதும் கீழ் ஆற்றல் நிலையிலிருந்து மேல் ஆற்றல் நிலை நோக்கி முன்னேறத் துடிக்கும் 'முயற்சி' இருப்பதுதான். இதை;

'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்கிறது தமிழ்மறை.

உடற் காயங்களை உடலியல் மருத்துவர்களிடம் காட்டி சரி செல்வதுபோல், மனக்காயங்களை உளவியல் மருத்துவர்களாகிய அறிஞர்கள், ஞானிகளின் உதவியுடன் சரி செய்யலாம்.

அவர்களை நேரில் சந்திக்கவியலாத நிலையில் அவர்களிடம் போக முடியாத நிலையில் அவர்களின் அறிவுரையைத் தாங்கி நிற்கும் நூல்கள் நம் மனதைச் சரிசெய்யும்.

எனவே உங்களது அரிய நூல்களைப் படித்து அவற்றின் மூலம் எண்ணத்தை பண்படுத்தி வாழ்வின் இலக்கை அடைய விரும்புங்கள்.

எண்ண அலைகளை நுட்பமாக்கி, அனுப்பும் வல்லமையும், அந்த எண்ண அலைகளை சூழ்நிலையின் வடிவமாக்கி, சரியாக அவற்றை அடையாளம் காணும் விழிப்புணர்வும் இருந்து விட்டால் போதும் நீங்கள் நினைப்பவை நிச்சயமாய் நிறைவேறும்.

"விழித்து கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார்
உன்போல் குறட்டை விட்டோரெல்லாம்
கோட்டை விட்டார்" என்ற பட்டுக்கோட்டையாரின் பாட்டுக்கு இந்த அர்த்தமும் உண்டு.

நாம் வாழ்வில் வெற்றி பெற ஒவ்வொரு செயலிலும் விழிப்பாயிருந்து இலக்கை அடைய வேண்டும்.

ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கும் மன எண்ணங்கள் ஒரு காரணியாய் உள்ளது. வாழ்வில் எது வந்தாலும் மனத்தின் வழியேதான் வரமுடியும். எனவே மனதை வயப்படுத்தி விட்டால் மரணத்தைக்கூடத் தள்ளி வைக்கலாம் வெல்லவும் செய்யலாம்.

இதைத்தான் திருவள்ளுவப் பெருந்தகை,
"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு" என்கிறார்.

மனம் எனும் மாயக்கணினியில் "வாழ வேண்டும்" என்று கட்டளை கொடுத்தால், வாழ்வதற்குத் தேவையான வேதி மாற்றங்களை ஒருவருடைய உடலில் நிகழ்த்தி விடும்.

வாழ்வதற்கு உரிய சூழ்நிலைகளை நம்மைச் சுற்றி உருவாக்கும். அதற்குரிய மக்களின் தொடர்புகள் ஏற்படும்.

மனம் எனும் கணினித் திரையில் நம்மை 'பிச்சைக்காரன்' என பதிவு செய்தால் அதற்குரிய சூழ்நிலையில் நம்மைச் சுற்றி ஏற்படத் தொடங்கிவிடும். 'கோடீஸ்வரன்' என பதிவு செய்தால், பிச்சைக்காரனாய் இருந்தால்கூட, கோடீஸ்வரன் ஆவதற்கு உரிய சூழ்நிலைகள் ஏற்படத் தொடங்கிவிடும்.

எனவே இலட்சியத்தை, இலக்கை அடைய முயலும் யாவரும் மனதைத் தன் வசமாக்கிக் கொள்ள வேண்டும்.

**விழுந்தாலும் முன்னோக்கி விழு**

வெற்றி பெறுவதற்கான இரகசியத்தை ஒரு இளைஞன் அறிய விரும்பினான்.

"கிரேக்க தத்துவஞானி சாக்ரடீஸை அவன் அணுகி, தன் விருப்பத்தை தெரிவித்தான். முதலில் அவர் அவனுக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. பிறகு அடுத்தநாள் காலையில், அவனை வரவழைத்து ஆற்றங்கரையில் தம்மைச் சந்திக்குமாறு அவனிடம் கூறினார்.

அப்படியே மறுநாள் அவரைச் சந்தித்தான் அவர் அவனைத் தம்முடன் ஆற்றில் இறங்க வைத்தார். திடீரென அவனைப் பிடித்து, அவன் தலையை நீருக்கடியில் அமிழ்த்தினார். அவன் மூச்சுவிட முடியாமல் தத்தளித்தான்.

ஆனால் அவர் தன் பிடியைத் தளர்த்தவில்லை. இனிமேல் அவனால் போராட முடியாது என்ற நிலை வந்தபோது, அவனைத் தண்ணீரின் மேல் மட்டத்திற்குத் தூக்கினார். (தொடரும்)

# தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!!

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

**உணவு உலகத்து அதிசயங்களும்... ஆச்சரியங்களும்...**

அதன் பின்புதான் தீயின் சிறப்பை மனிதன் உணர்ந்தான். தங்களுக்கு சுவையான உணவை அறிமுகப்படுத்தியதற்காக மனிதன் தீயை வணங்கினான். அதற்கு முன்புவரை தன் உயிரை காக்க மிருகங்களை வேட்டையாடிய அவன், பின்பு தன் உணவுக்காக வேட்டையாடினான். தீயை உருவாக்க தெரிந்து கொண்டான். சுட்டுத்தின்னவும் தொடங்கினான். இதுதான் அசைவ சமையலின் ஆரம்பம்..." என்று பத்மசிங் ஐசக் கூறியபோது கேட்க ருசிகரமாக இருந்தது.

'இயற்கைதான் மனிதனுக்கு பகுத்தறிவை உணர்த்தியது என்று கூறினீர்களே! அதற்கு உணவுரீதியாக இன்னொரு உதாரணத்தை சொல்லுங்கள்?'- என்று அவரது ஆர்வத்தை தூண்டிவிட்டேன்.

"சொல்கிறேன்! ஆதிகாலத்திலே மனிதன் தேனை கண்டுபிடித்து விட்டான். அதன் ருசிக்கு அவன் அடிமையானான். உயரமான மலைகளிலும், மரங்களிலும் இருந்த அடைகளைத் தேடிப்பிடித்து தேன் எடுத்த மனிதன், அந்த தேனை எங்கிருந்து தேனீக்கள் கொண்டு வருகின்றன என்பதை அறிய அதன் பின்னால் உயிரை பணயம் வைத்து ஓடினான். பூவில் இருந்து தேனீ, தேனை எடுக்கிறது என்பதை உணர்ந்தான். அதோடு 'அடுத்த வேளைக்கு சேர்த்து வை' என்ற பகுத்தறிவையும் தேனீ மூலம் இயற்கை மனிதனுக்கு உணர்த்தியது.

கிடைத்த இடத்திலே உண்ணாமல், பாதுகாப்பான இன்னொரு இடத்துக்கு கொண்டு போய் எதிர்காலத்துக்கும் சேர்த்து வைக்க வேண்டும் என்ற சேமிப்பு திட்டத்தை முதலில் தேனீக்கள்தான் மனிதனுக்கு அறிமுகப்படுத்தி இருக்கின்றன." என்றார்!

உண்மைதான்! சேகரிப்பு, சேமிப்பு போன்றவைகளை எல்லாம் ஆதிமனிதனுக்கு தேனீக்கள்தான் கற்றுக்கொடுத்திருக்கின்றன. சுவையான தேனை கொடுத்ததோடு. வாழ்க்கை தத்துவங்களையும் தேனீக்கள் மனித சமுதாயத்திற்கு கொடுத்திருக்கிறதே!

"நான் உணவு வரலாற்றை தேடிப்படித்த போது உணவுக்கு அப்பால் சில உண்மைகளையும் தெரிந்து கொண்டேன். மனிதனின் முகத்தில் முதலில் சிரிப்பை உருவாக்கிய பெருமைக்கு சொந்தக்காரர்கள்கூட தேனீக்கள்தான்" என்றார், பத்மசிங் ஐசக்! எப்படி?



"பிறந்த குழந்தை ஓவென பசியாலும், சீதோஷ்ண நிலை மாற்றத்தாலும் அழும். ஒரு சொட்டு தேனை அதன் உதட்டில் தொட்டு வைப்பார்கள். உடனே அதை ருசித்து அழுகையை நிறுத்திவிட்டு, குழந்தை சிரிக்கும். அதனால் மனிதனின் முதல் சிரிப்புக்கு தேன்தானே காரணம்" என்று ரசனையோடு பகிர்ந்து கொண்டார்.

'இப்போது கோதுமை மாவில் எக்கச்சக்கமான உணவுகள் தயாராகின்றன. கோதுமையை மனிதன் எப்போது கண்டுபிடித்தான்?, முதலில் எப்படிப்பட்ட உணவை தயார் செய்தான்?' என்ற கேள்வியை அவர் முன் வைத்தேன்.

"கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி.மு) எட்டாயிரம் ஆண்டில் கோதுமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பண்டைய கிரேக்கர்கள் தான் கோதுமையில் முதல் 'ரெசிப்பி'யை தயார் செய்து சாப்பிட்டிருக்கிறார்கள். கோதுமையை இடித்து மாவாக்கி, அதில் தேன் கலந்து பிசைந்து, கோழி முட்டைகளையும் அடித்து ஊற்றி கிளறி ருசித்திருக்கிறார்கள்."

பத்மசிங் ஐசக் இந்த வரலாற்று பகிர்ந்து கொள்ளும் போதே நாக்கில் உமிழ் நீர் சுரக்கிறதல்லவா!

'அதன் ருசி எப்படி இருந்திருக்கும்?' என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்த போதே அடுத்த தகவலுக்கு போய்விட்டார்.

"உலகின் முதல் காய்கறி உணவாக பீன்ஸ் குறிப்பிடப்படுகிறது. விவசாயம் தோன்றிய காலத்தில், இதுதான் மிக எளிதாக அதிக மகசூலை கொடுத்திருக்கிறது. முதலில் பச்சையாகவே மக்கள் இதனை சாப்பிட்டிருக்கிறார்கள். சமைக்க கற்றுக் கொண்ட பிறகும் பல்வேறு உணவுகளில் பீன்சை சேர்த்து மனிதன் சுவையாக சாப்பிட்டிருக்கிறான்." என்றார்.

பேசிக்கொண்டிருந்த போதே எங்களுக்கு சன்னா மசாலாவும், சமோசாவும் பரிமாறப்பட, சன்னா மசாலாவின் வரலாற்றை தெரிந்து கொள்வதற்காக அதையே கேள்வியாக்கினேன். (தொடரும்)




கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

போன்:9443742889. 7708701159.

சரவணன் ரியல் ஏஜென்சிஸ்

காமாட்சி ஸ்டோர்ஸ்

தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்

நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.





N.R.N.Group

போன்:044-26790587

பிரியா டிப்போ

கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.






# GP கோபால் பிளாஸ்டிக்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33



S.இராஜகோபால்

## RS பிளாஸ்டிக்

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.



S.ஜெயராஜ்



# ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**
2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.





N.R.P.செந்தில் நாடார், செல்:9841038856,

# N.R. பட்டுராஜன் டிரேடர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி, தள ஓடு, கடப்பா கல், சுண்ணாம்பு, M.Sand, P.Sand. கிடைக்கும். **Email: senthilnrp@gmail.com**
4, ஆற்காட் ரோடு, கணபதி நகர், போரூர், சென்னை-116.

# வெற்றிப்படிக்கட்டு



வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP **(Member of Parliament)**

**உன்னை அறிந்தால் உயர்வு!**

"உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்" ஆம் உயர்ந்த லட்சியவாதிகள், கொள்ளையாளர்கள் தங்கள் கொள்கையை உணர்ந்து செயல்படுவதில் தீவிரம் காட்டுவார்கள். அதை ஒரு நிதர்சனப் போக்காகவே எடுத்துக் கொள்வார்கள். அதுதான் அவர்களது வெற்றிக்கு வழிவகுக்கிறது.

மகாத்மா காந்தி பிரிட்டிஷ் மகாராணியைச் சந்திக்கப் போனார். தமது வழக்கமான எளிய உடையுடன் போனார். ஆனால் அதிகாரிகள் உள்ளே அனுமதிக்கவில்லை. அரசியாரைச் சந்திப்பவர்கள் ஆடம்பரமான உடை அணிந்து வர வேண்டும் என்று கூறினார். ஆனால் மகாத்மா காந்தி தமது கொள்கைப்பிடிப்பை அங்கு நிலைநிறுத்தினார். என் நாட்டு மக்களின் நிலையை மகாராணியார் தெரிந்து கொள்ள வேண்டும்.

என் கொள்கையில் மாற்றம் இல்லை என மறுத்தார். அதிகாரிகள் வேறு வழியில்லாமல் அவரை அந்த எளிய உடையில் மகாராணியைச் சந்திக்க அனுமதித்தனர். இதுதான் உலகளவில் பேசப்பட்டு மகாத்மாவின் கொள்கைப் பிடிப்பை மற்றவர்களும் பாராட்டிக் கடைப்பிடிக்கும் வகையில் அமைந்தது.

1947-ல் தமிழக முதலமைச்சராக இருந்தவர் ஓமந்தூர் இராமசாமி எளிமையானவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரிய படிப்பு பட்டங்கள் பெறாதவர். ஆனாலும் ஓரளவு படித்த கல்விமான். ஒரு முறை மத்திய அரசு எதோ ஒரு முக்கியப் பிரச்சினை சம்பந்தமாக மாநில முதல்வர் என்ற முறையில் அவரது கருத்தைக் கேட்டு எழுதியிருந்தனர். உடனே ஓமந்தூரார் தம் கைப்பட ஒரு கடிதம் எழுதினார்.

"அக்கார்டிங் டு மை ஒபீனியன்" என்று கடிதத்தில் ஆரம்பித்து தம்முடைய கருத்தை எழுதிக் கீழே கையெழுத்து போட்டுத் தமது அரசுச் செயலாளரிடம் கொடுத்து டெல்லிக்கு அனுப்பி வைக்குமாறு கூறினார். செயலாளரோ அந்தக் கடிதத்தில் ஒபீனியன் என்ற ஆங்கில வார்த்தையில் ஸ்பெல்லிங் மிஸ்டேக் இருப்பதைப் பார்த்தார். எனவே அந்தக் கடிதத்தை டைப் செய்து தவறில்லாமல் சரிபார்த்து மீண்டும் முதலமைச்சரின் கையெழுத்துக்கு அந்த கடிதத்தைக் கொடுத்தார்.

அதைப் பார்த்த ஓ.பி.ஆர் டென்ஷனாகிவிட்டார். நான்தான் கைப்பட எழுதி கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டேனே பிறகு எதற்கு இந்த லெட்டர்?" என்று கேட்டார். உடனே செயலாளர், ஒபீனியனில் பிழை இருப்பதைச் சுட்டிக் காட்டினார். பிழைகளைத் திருத்தம் செய்து டைப் செய்ததாகச் சொல்ல முதலமைச்சர் கோபமாக அவரிடம் "மத்திய அரசு என்னுடைய ஒபீனியன்தான் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கு உன்னுடைய ஒபீனியனை கேட்கவில்லை. என்னுடைய கருத்தை என் கைப்பட நான் எழுதிக் கொடுத்தேனே. அதை அப்படியே அனுப்புங்கள்" என்று சொன்னார்.

செயலாளரோ தயங்கியபடி அதில் ஒபீனியன் ஸ்பெல்லிங் மிஸ்டேக் என்று ஏதோ சொல்ல வந்தார். அப்ப முதல்வர் ஓமந்தூர் இராமசாமி கண்டிப்பான முறையில் "அய்யா மத்திய அரசுக்கு என்னுடைய நிலை என்ன? என்னுடைய தகுதி என்ன? என்பது தெரிய வேண்டாமா? நான் எப்படிப்பட்டவன் என்பதையும் எனக்கு ஆங்கிலக் கல்வியறிவு குறைவு என்பதையும் மத்திய அரசுக்குத் தெரியட்டுமே. ஆங்கிலேயரை எதிர்த்ததால் அந்த ஆங்கிலத்தின் மீது பற்று அதிகம் இல்லை" என்று சொல்லி. தமது எளிமையான அணுகுமுறையை வலியுறுத்தினார். இதுதான் ஒருவர் தன்னைப் பற்றி தெரிந்துகொண்டு செயல்படுவது.

'உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்' என்ற கவிஞரின் பாட்டுக்கு அர்த்தம் இதுதான், என்பதைப் புரிந்து கொள்ளலாம். இது வெற்றியாளனுக்குரிய சிந்தனைச் செயல்பாடு.

(தொடரும்)



"நேர்மையுள்ளோர் மக்கள் மனதில் என்றும் வாழ்வர்"(தி.பா.112:6)

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி!

# ஜோசப் ஸ்டாலின் B.E

## வடக்கன்குளம்

எம்மோடு
9.6.1969

இறையோடு
25.8.2021







**இரண்டாம் ஆண்டு நினைவுநாள் உனக்கு!**
**இதயத்தைக் கணை துளைத்த நாள் எமக்கு!**
**அன்பின் ஊற்றாய், பண்பின் சிகரமாய்**
**குடும்பத்தின் ஒளியாய், உறவின் பாலமாய் வாழ்ந்த நீ**
**எதிர்பாராது வந்த இறையழைப்பால் பிரிந்தாய்!**
**எண்ணிலா ஆண்டுகள் எம்மோடு வாழ்வாய் என**
**எண்ணிய உன் அன்பு மனைவி, மக்கள், அன்னை**
**உன் முகம் மீண்டும் காணத் துடிக்கின்றோம்.!**
**நின் ஆன்மா அமைதியுற வேண்டுகின்றோம்!**

**ஆறாத்துயரில் அம்மா - லீலா ஸ்டீபன்**
**மீளாத் துயரில் மனைவி -மேரி ஸ்டாலின்**
**அன்பு மகள் - ஷெர்லி ஸ்டாலின்**
**பாச மகன் -ஸ்டீவன் ஸ்டாலின்**

மற்றும் உறவினர்கள்
மயூரேஷ்பார்க், பாண்டுப்,
மும்பை-78

# மானாடும் மானாட்டாரும்:கி.பி.1600 விடியலிலிருந்து-4

-டாக்டர் ஆ.தசரதன். செல்:9444169603.

சான்றோர்குல நாடார்களின் வரலாற்று எழுச்சி கி.பி.16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோற்றமெடுத்து, கி.பி.1600, 1606ஆகிய ஆண்டுகளில் கல்வெட்டுகள் மூலமாகவும் கதைப்பாடல்கள் மூலமாகவும் பரவலாக்கப்பட்டது என்பதைச் செண்பராம பணிக்கன் வரலாற்றிலிருந்தும் வலங்கைச் சான்றோர் வீரர்களின் வரலாற்றை விளக்கும் வலங்கை மாலையிலிருந்தும் விசய நகர ஆட்சியாளர் காலத்து வெங்கலராச சோழனான மகாமண்டலேசுவரனின் வரலாற்றிலிருந்தும் இதுவரைஅறிந்தோம்.

இவர்களை அடுத்து, கி.பி.1617 ஆம் ஆண்டு முதல் கி.பி.1623 ஆம் ஆண்டு வரையிலும் அதன் பின்னரும் பல வரலாற்றுக் கதை மாந்தர்களைத் தம் பாட்டில் பாடிவைத்துள்ள மானவீரவள நாட்டினரான அருதனக்குட்டிப் புலவர் காலத்துச் சான்றோர் குலத்தினரின் வரலற்றை இனி ஆராயலாம்.

அருதக்குட்டிப் புலவர் என வழக்கில் புழங்கப்பட்ட பாட்டாளி கி.பி.1575 முதல் 1676வரை வாழ்ந்ததாக அறியப்படுகிறது. சோனாட்டில் அதாவது மானவீரவள நாட்டிலிருந்து வேறு பகுதியில் பிறந்து தமது 5ஆம் வயதில் தேரியூர் தாங்கையூருக்குக் குடியேறியதாக இவர் தம் பாட்டில் குறித்துள்ளார்.

மானவீரவளநாட்டு ஏனாதி ஆனந்தன் என்ற பாட்டாளியிடம் பயின்றதாகக் குறிப்பிடும் இவர் வலங்கைமாலை பாடிய சுந்தரத்துடனும் வெங்கலராசன் கதையைப் பாடிய அகத்தீசுவரம் ஆறுமுகப் புலவருடனும் சேர்ந்து ஏனாதி ஆனந்தனிடம் பயின்றவராக அறிய முடிகின்றது.

ஏனாதி ஆனந்தனே சான்றோர்குல நாடார்களின் வரலாறுகளை மக்களிடம் எடுத்துச் சென்ற முன்னோடிப் பாட்டாளியாகக் கி.பி.16ஆம் நூற்றாண்டின் இறுதியில் அடையாளப்பட்டாலும் இவர் பாடியதாக எந்தப் பாட்டும் கிடைக்கவில்லை.

அருதக்குட்டிப் புலவர் தம்முடன் பயின்றவர்களைப் போல், தம் வகையறாவினரின் வரலாற்றைக் கல்வெட்டுச் சான்றுகளுடனும் செப்பேடுகள், சுவடிகள் போன்ற வரலாற்று ஆதாரங்களுடனும் மிகப் பழங்காலத்திலிருந்து தம் காலம் வரை வரையறை செய்தவராகத் தெரியவருகிறார்.

கி.பி.1617ஆம் ஆண்டு இவர் பாடிய அரங்கேற்றிய செண்பக நாச்சியார் வரலாறு வில்லிசையில் அமைந்து, ஓலைச்சுவடிகளில் இடம்பெற்று, அவ் அம்மையாரைக் குலதெய்வமாக வணங்கும் கூட்டத்தார் மத்தியில் புகழ்பெற்றுள்ளது. மானவீரவளநாட்டினரான இக் கூட்டத்தார் இக்காலத்தில் பல ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

செண்பக நாச்சியாரை முன்னோடித் தெய்வமாக வழிபட்டுவரும் சான்றோர்குல நாடார்களில் தொடக்ககாலக் கூட்டத்தார் பழனியிலிருந்த அவ் அம்மையாருடன் தென்பாண்டி நாட்டு மானாட்டுப் பகுதிதேரியூர் தாங்கையூருக்குக் குடிபெயர்ந்ததாக அருதக்குட்டிப் புலவர் 1617ஆம் ஆண்டு அந்த வலாற்றைப் பாடி வைத்துள்ளார். இக்கூட்டத்தாரில் சிலர் வரும் வழியில் ஆங்காங்கே தங்கிவிட்டதாகவும் சிலர் ஆங்காங்கிலிருந்து வந்து சேர்ந்து கொண்டதாகவும் தெரியவருகிறது. இவர்கள் அனைவரும் இங்கிருந்தவர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

ஆதலால், அவர்களும் தெய்வங்களாகப் படையல் பெற்று வருவதால் செண்பக நாச்சியார் கூட்டத்தாரின் மூதாதையராக அடையாளப் படுகின்றனர்.

செண்பக நாச்சியார் கூட்டத்தினர் பழநியிலிருந்து புறப்பட்டு விசய நகர ஆட்சியாளர்களிருந்து இராய வேலூரில் பட்டயம் பெற்று, அதாவது அனுமதிச்சீட்டுப் பெற்றுத் தென்பாண்டி நாட்டுக்குத் தொண்டை மண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம் வழியாக வந்தடைந்ததாக அறிய முடிகிறது.

இராயவேலூரை விட்ட இக் கூட்டத்தார் திருப்பனையூர் சீர்காழி, திருவாரூர், வெள்ளியணை, திருவரங்கம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, செண்பகத் தோப்பு, திருவில்லிபுத்தூர், இராசபாளையம், கரிவலம் வந்த நல்லூர், சங்கரன்கோவில், இந்திரக் கன்னியர் நகர், திருநெல்வேலி, சிந்துபூந்துறை, பாளையங்கோட்டை, வேளூர், ஆழ்வார் திருநகரி, எழுவரை முகரி வழியாகத் தாங்கையூருக்கு வந்ததாகப்பாடப் பெற்றுள்ளது.

இவ்வூர்களில் ஓரிரு பகுதிகள் தவிரப் பிறவற்றில் உள்ள கோயில்களில் இக்கூட்டத்தாரின் மூதாதையர் தங்கியிருந்ததைக் கண்டும், கலந்தும், கடந்து வந்ததாகவும், அதற்கான கல்வெட்டுகளிலிருந்து சான்றுகளைத் தெரிந்துகொள்ளமுடிகிறது.

தாங்கையூரில் செண்பக நாச்சியாருக்குப் பள்ளிப்படை கோவில் அமைத்து, கி.பி.1617முதல் வழிபட்டுவரும் இக்கூட்டத்தாரில் சில குழுவினர் அவ்வூரில் பாதுகாப்பு இன்மையாலும் பிழைப்புக்காவும் திசையன்விளை அருகில் உள்ள நவ்வலடி, குமரி அருகிலுள்ள கவர்குளம், உடன்குடி சமீபம் சிதம்பரபுரம், அதன்பின்பு சிறு வணிகம் மற்றும் விவசாயம் தொடர்பாகச் சிவகாசி சமீபம், திருவில்லிபுத்தூர் சமீபம் உள்ள ஊர்கள், தேனிசமீபம், தென்காசி சமீபம் உள்ள ஊர்கள் எனப்பல ஊர்களில் இன்று பல்லாயிரக்கணக்கான சான்றோர்குலத்தினராக வாழ்ந்தும் வளர்ந்தும் வருகின்றனர்.

கி.பி.1580ஆம் ஆண்டிலிருந்து, ஏறத்தாழ 500 ஆண்டுகள் அறியப்பட்ட வரலாறு கொண்ட இக்கூட்டத்தார் சிலர் செண்பக நாச்சியாருடன் வேறு சில மூதாதையரையும் மாரியம்மன், பத்திரகாளிஅம்மன் போன்ற அம்மன் தெய்வங்களையும் வணங்கிவருகின்றனர். இம் மூதாதையரில் பெருமாள்சாமி தம்பிரான், அந்திரமுடையார், கபாலகாரன், சின்னப்பிள்ளை நாச்சியார், குருசாமி, எமன், காலன், தோட்டீசுவரி, சேத்திரபாலன், சங்கிலிப் பூதத்தார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

மானவீர வளநாட்டினரான இவர்கள் மானாட்டார் அல்லர். நாச்சியார் கூட்டத்தார் என அடையாளப்படுவோர் ஆவர். பழநியில் சோழ குலத்தினராக அடையாளப்பட்ட இவர்கள் அண்மைக்காலத்தில் அவ்வாறாக அடையாளப்படத்தக்க சான்றாதாரங்களைக் கண்டறியவில்லை என்றே தோன்றுகிறது.

அருதக்குட்டி அடிகளார் தம்மை "நாடன்" என்று அடையாளப்பட்டுக் கொண்டதுபோல் நாச்சியார் கூட்டத்தினரும் அவ்வாறு அடையாளப்படுவதில் ஆட்சேபம் இல்லை என்றே கருதலாம்.

செண்பக நாச்சியார் தவிர்த்த வேறுசில தெய்வங்களை வணங்கும் இவர்களுடன் உறவுள்ள வேறுபலரும் தம்மை அரசலகுத்தினர் என்றும் சேரன், பாண்டியன் தொடர்புள்ளவர்கள் என்றும் அடையாளப் படுத்திக் கொள்ளத்தக்க சான்றுகள் உள்ளனவாயினும் அவற்றையும் இவர்கள் கண்டறிந்து அருதக்குட்டிக்கு முன்பு சில நூறு ஆண்டுகள் எனவும் அவருக்குப் பின், அதாவது கி.பி.1675க்குப் பின் சில நூறுஆண்டுகள் என்றும் தன் வரலாற்றை முறைப்படுத்திக் கொள்ளலாம்.

செண்பக நாச்சியார் எனும் வரலாற்றுக் கதை மாந்தரின் விரிவான வரலாற்றை நான் 2001ஆம் ஆண்டு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை நிதியுதவியுடன் வெளியிட்டேன். பின்பு அவ் அம்மையாரின் வழிபாட்டுக் கூட்டத்தினரில் திருவில்லிபுத்தூர் அன்பர் செந்தில், தேனி சமீபம் அண்ணாச்சி குலோத்துங்கன், நார்சாகிபுரம் நண்பர் சிவகுமார் போன்றோரின் உதவியால் 2022ஆம் ஆண்டு புத்தகத்தையும் கண்டறிந்த சில கோயில்களின் படங்களையும் புது விளக்கங்களுடனும் வெளியிட்டேன்.

இந்தநூலில் எழுதப்பெற்றுள்ள வரலாற்றுக் குறிப்புகளின் அடிப்படையிலும் அருதக்குட்டியாரின் வமிசாவளியினரின் இருப்புப் பற்றியும் அறிந்த தமிழக அரசு அருதக்குட்டியாரின் வாரிசுகளுக்கு ரூபாய் 5இலட்சம் அளித்துச் சிறப்புச் செய்ததுகுறிப்பிடத்தக்கது.

இந்த வரலாற்றுக் கதைப் பாடல் பதிப்பிற்குப் பெரிய அளவில் தொகை அளித்தும் வெளியிட்டுச் சிறப்புச் செய்தும் என்னைப்பாராட்டியவருமான அய்யா டாக்டர் பா.சிவந்திஆதித்தனார் அவர்கள் நினைவில் நன்றியோடு நினைக்கத் தக்கவர்கள். அவர்களுடன் அண்ணாச்சி நெல்லை நெடுமாறன் அவர்களும் அண்ணாச்சி சபாபதி அவர்களும் பிற நண்பர்களும் வணங்கத்தக்கவர்கள்.

உரிமை:S.MAXY
Praise The Lord
9444580976
9962843074
மெசியா பிளாஸ்டிக்
பழைய பிளாஸ்டிக் மொத்த வியாபாரம்
(பழைய பிளாஸ்டிக் மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்கப்படும்)

எண்:285/2ஏ2 இந்திரா நகர், கனராவங்கி எதிரில், சேலையூர், சென்னை-73.

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.

## 8.நாடார்களின் பிரிவுகள்

3).நட்டாத்தி:



பாண்டியர்கள், சோழர்கள் இணைப்பின் வழி வந்தவர்கள் "நட்டாத்தி நாடார்கள்" என்று புராணச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

நாட்டாத்திகளின் தலைவர்களில் ஒருவர் கட்டபொம்ம நாயக்கரின் கையாளாக இருந்து வந்துள்ளான். இதன் காரணமாக அந்தக் குடும்பத்திற்கு ஆங்கிலேயர் ஆட்சியில் ஜமீன்தாரி உரிமைகள் வழங்கப்பட்டன.

திருவைகுண்டம் வட்டத்திலுள்ள பெருங்குளத்தையடுத்துள்ள "நட்டாத்தி" எனும் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு வாழ்ந்த சான்றோர் குலப் பிரிவினர் ஊமைத்துரை செவத்தையா தலைமையில் அணிவகுத்ததோடு, ஆங்கிலேயக் கும்பினியரால் இடிக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை ஒரு வார கால அளவில் பிரம்மாண்டமாக எழுந்து நிற்பதற்கும் உதவினர். கோட்டை மீண்டும் விரைந்து எழுப்பப்பட்டது (குறித்துப் பக்கம் 204, South Indian Rebellion by K.Rajaiyyan காண்க) இவர்களால் வழங்கப்பட்ட கோழி முட்டையின் வெள்ளைக் கரு, பனை வெல்லம் ஆகியவையே கோட்டைக் கட்டுமானப் பணிக்கு முதன்மையாகப் பயன்பட்டன.

நட்டாத்தி நாடார்கள், ஊமைத்துரையின் தம்பி செவத்தையா, குமாரசாமித் தளவாய், மருது வம்சத்தவராகிய சிவஞானம் ஆகியோருக்கு அடைக்கலம் அளித்ததன் அடையாளமாக இவர்களின் ஊரையொட்டிச் செவத்தையாபுரம் (சிவத்தையாபுரம் என்று 19ஆம் நூற்றாண்டைய கல்வெட்டுக் குறிப்பு உள்ளது. அண்மைக்காலமாகச் சிலர் செபஸ்டியான்புரம் என கூறிவருகின்றனர்), குமாரகிரி, குமாரபுரம், சிவஞானபுரம் ஆகிய ஊர்கள் உள்ளன. 1801ஆம் ஆண்டில் செவத்தையா தலைமையில் சான்றோர் குலத்தவர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றது குறித்து 13.3.1801 தேதியிட்ட Madras Council, @Military Consultations Vol.280 P.1481 -சென்னை ஆவணக் காப்பகப் பதிவேட்டில் ஆதாரம் உள்ளது.

நட்டாத்தி என்பது பெண்வழிப் பிரிவு. நாயக்கர்கள் போல் இல்லங்கள் எனப்படும் கிளைகள் மூலம் இவர்கள் இனம் காணப்படுகின்றனர்.

இவர்கள் இன்றைய தூத்துக்குடி மாவட்டத்திலும் மண்டைக்காட்டுப் பகுதியிலும் உள்ளனர். திருநெல்வேலி மாவட்டம், சாயர்புரம் அருகில் உள்ள நட்டாத்தி என்ற கிராமத்தைச் சுற்றி நிறைந்து வாழ்ந்து வந்தனர். நட்டாத்தி கிராமத்தை விட்டு வெளியேறி சென்னை, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடியேறி வசித்து வந்தனர். எண்ணிக்கையில் குறைவாக இருந்த இவர்கள் பெரும்பாலும் படித்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் தொன்றுதொட்டு பனைத் தொழிலைக் காட்டிலும் வட்டிக்கு பணம் கொடுப்பது, வணிகம், உழவுத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த சமூகத்தில் கிறிஸ்துவர்களும், இந்துக்களும் சமமாக உள்ளனர். இவர்களிடையே கலப்புத் திருமணம் நடைபெறுகிறது. இவர்கள் தனிப் பிரிவாக வளர்ச்சி பெற்றார்கள். அந்தக் காலக்கட்டத்தில் "நாடார்" என்ற பொதுப் பெயருடன் இணையும் வரை பிரிந்தே வாழும் நிலை இருந்தது.

நாடார் சமூகத்திலேயே இலங்கை, மலேசியாவுக்கு சென்று முதலில் குடியேறிவர்கள் நட்டாத்தி நாடார்களே ஆவர். வெளிநாடுகளில் வளம் வாய்ந்த வணிகர்களாக உயர்ந்து விளங்கினார்கள்.

4).கொடிக்கால்:

கொடிக்கால் பிரிவினர் அம்பாசமுத்திரம், தென்காசி ஆகிய இடங்களில் அதிகமாக வசித்து வந்தனர். தஞ்சாவூரில் உள்ள காவேரி நதிக்கரையிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வந்து குடியேறினார்கள் என்ற கருத்தும் உண்டு. அதன்பின் பாண்டிய மன்னருக்கு போரின் போது நம் பாண்டிய மீன் கொடியை ஏந்திச் செல்பவர்களாகப் பணியாற்றி, அரச சபையில் அங்கமும் வகித்து உள்ளனர். இவர்கள் போர்புரிவதிலும் முதன்மையாக இருந்தார்கள்.

விவசாயிகளாக இருந்த இவர்கள் பனைத் தொழிலையே தொன்றுதொட்டு செய்துவந்தாலும், கொடிக்காலில் வெற்றிலை பயிரிட்டும் வந்தனர். இதனால் இவர்களுக்கு "கொடிக்கால்" என்று பெயர் ஏற்பட்டு இருக்கலாம் திரு பேட்ஸ் என்பவர் இவர்களை நட்டாத்திகளுடன் சேர்த்துக் கூறுகிறார். ஆனால், அவ்வாறு இருந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லை.

5).கள்ளச் சாணார்:

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இவர்கள் நாடார்களின் பண்ணைகளில் வேலை செய்து வந்தனர். இவர்கள் பாண்டிய மன்னர்களுக்கும், நாடார் மணமக்களுக்கும் பல்லக்கு தூக்குபவர்களாகவும், கோயில்களில் தீவட்டிபிடித்தல், கோயில் வாகனம் சுமத்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தனர். குற்ற வேலைகளைக் கவனித்தவர்களாகவும் இருந்து உள்ளனர்.

கள்ளச் சாணார்களுக்கு "புழுக்கா" என்ற பெயரும் உண்டு இவர்கள் பெரும்பாலும் "விரன்" என்று அழைக்கப்பட்டனர். வீரன் என்பதற்கு சிறப்பான பட்டப் பெயர் "சேனாதிபதி" ஆகும். இவர்கள் பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆங்காங்கே சிதறி வாழ்ந்து வந்தனர். குறைந்த எண்ணிக்கை உடைய இவர்கள் சேர்ந்து சமூகமாக வாழ்வதைக் காண இயலாது. இவர்கள் நாடார் பிரிவில் தாழ்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள். நாடார் சமுதாயத்திற்கும், இவர்களுக்கும் தொடர்பு சிறிதளவே இருந்தது.

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133



**அந்தமான்**

**மனிதன்:** உலகத்தில் ஒரு சிலர் இந்தக் கொடூர குணமிக்க மானிடர்களாக இருக்கிறார்கள் என்ன செய்வது? அரசியல்வாதிகள் சட்டம் மட்டும் இயற்றுவார்கள். ஆனால், அதனைச் செயல்படுத்துபவர்கள் உயர் அதிகாரிகள் தான். கட்சி வரும், போகும். ஆனால், அதிகாரிகள் அப்படி இல்லையே? நிலையாக இருப்பவர்கள். நாட்டு முன்னேற்றம் அவர்கள் கையில் தான்.

**மான்:** எனது இனத்தின் வயிற்றெரிச்சலைக் கிளறாதே. ஒரு சில உயரதிகாரிகள் செய்யும் அநியாயங்கள், அட்டூழியங்கள்தான் அதிகம். ஆனால், நல்ல அதிகாரிகளும் பலர் உள்ளனர்.

**மனிதன்:** எனக்கு நேரமாகிவிட்டது. மதிய சாப்பாடு சாப்பிட வேண்டும். வீட்டிற்குச் செல்கிறேன்.

**மான்:** நாங்கள் மேய்ந்த புல் ஜீரணித்து விட்டது. கடைசியாக ஒன்றை மட்டும் உன்னிடம் சொல்லிவிட்டு, புல் மேயச் செல்கிறேன். "மானுடா! உங்கள் உலகத்தில் வாழ்வோர், சோற்றுக்கும், ஆடைக்கும் பொய் பேசுகிறார்கள், வஞ்சனை செய்கிறார்கள், நடிக்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள், திருடுகிறார்கள், இம்சை செய்கிறார்கள், கொலை செய்கிறார்கள், உடலை விற்கிறார்கள், அறிவை விற்கிறார்கள், அடிமையாக ஆத்மாவையும் விற்கிறார்கள்."

**மருத்துவம்**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சைக்கு அதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கும். நோய் வருவது இல்லை. நோய் வந்தால் அதைக் குணப்படுத்த அதிக செலவு ஆகும்.

தேசிய நெடுஞ்சாலை ஓரமாகத்தான் மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எல்லோருக்கும் தெரியும்படி "மருத்துவமனை" என்று ரோட்டு ஓரமாக, போர்டு எழுதி வைத்திருக்கிறார்கள். அத்துடன் தொலைபேசி எண்ணையும் எழுதி வைத்திருப்பார்கள்.

"எல்லோருக்கும் மருத்துவ சிகிச்சை" கொடுப்பதை அரசு தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இங்குள்ள மக்கள் எல்லோரும் மருத்துவக் காப்பீடு செய்துள்ளனர்.

நோய் நிமித்தமாக யாரேனும் மருத்துவரிடம் சென்றால், அவர்கள் காப்பீட்டுத் திட்டத்தில் அதற்குரிய செலவினத்தைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால், மருத்துவரிடம் செல்லும் நோயாளிகள், 20 சதவீதம் பணத்தை, உடனே கொடுத்துவிட வேண்டும். மீதி பணத்தை இன்சூரன்ஸ் கம்பெனியிடமிருந்து அவர்கள் வாங்கிக் கொள்வார்கள்.

மருத்துவருடைய கையெழுத்து இல்லாமல் எந்த மருத்துக் கடையிலும் மருந்து மாத்திரை வாங்க முடியாது. டெக்சாஸ் மாநில அரசு இதில் கண்டிப்பாக இருக்கிறது.

டாக்டர்கள் கொடுக்க வேண்டிய மருந்தை பார்மஸிஸ்டிற்கு இ-மெயிலில் சொல்லிவிடுவார்கள். டாக்டர் சொன்ன பிறகுதான் பார்மசிஸ்ட் மருந்து தயார் செய்து நோயாளிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மருந்து கொடுக்கப்படும் நேரம், நாள் எல்லாம் குறிப்பிடுவர். நோயாளிகள் பார்மஸியில் போய் மருந்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, எதற்கும், எங்கும் வரிசை தான். குறிப்பாக மருத்துவமனைகளில் மிகவும் கண்டிப்பாக இம்முறை கடைபிடிக்கப்படுகிறது.

நோயாளிகள் வந்தவுடன், தனது பெயரைப் பதிவு செய்ய வேண்டும். அது சம்பந்தமான படிவம் ஒன்றைக் கொடுத்து நிரப்ப சொல்லுவார்கள். அந்த பாரத்தை நிரப்பிக் கொடுத்தவுடன் வரிசை எண் கொடுத்துவிடுவார்கள். அவரவர் வரிசை எண் வந்ததும் நோயாளியை 'மைக்' மூலம் அழைப்பார்கள். பிறகுதான், அவர் டாக்டரிடம் செல்ல வேண்டும்.

அவசர சிகிச்சைக்கென்று, 'தனிப்பிரிவு' வைத்திருப்பார்கள். அங்கும் வரிசைதான். 'அவசரமாச்சே!' என்று வரிசையை மீறி யாரும் செல்ல மாட்டார்கள். அதிகமாக டாக்டர்கள் ஊசி போடுவது கிடையாது. மாத்திரைதான் கொடுப்பார்கள்.

முதலில் பொது மருத்துவர்களைச் சந்தித்து சிகிச்சை பெற வேண்டும். இதில் குணமடையவில்லையென்றால்தான் சிறப்பு மருத்துவரிடம் அனுப்பி வைப்பார்கள். சிறப்பு மருத்துவரிடம் செல்வதற்கு முன் எல்லா டெஸ்ட்களையும் முடித்து, அந்த ரிசல்ட்டை கொண்டு செல்ல வேண்டும். இந்த ரிசல்ட்டை அடிப்படையாக வைத்துதான் அவர் தேவையான மாத்திரைகள் எழுதிக் கொடுப்பார்.

இங்கு அலோபதி சிகிச்சைதான் எல்லோருக்கும் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டைப் போன்று சித்தா, ஆயுர்வேதிக் ஹோமியோபதி, யுனானி மருத்துவ சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளை நான் பார்க்கவே இல்லை. வேறு சில மாநிலங்களில், இந்திய மருத்துவ சிகிச்சைகளும் கொடுக்கிறார்கள் என்பது செய்தி.

கன்சல்டேஷனுக்கு 100 டாலர் கொடுக்க வேண்டும். அதாவது இந்திய நாணயத்திற்கு ரூ.6000 ஆனால், சிறப்பு மருத்துவரிடம் செல்ல குறைந்தபட்சம் 200 டாலர். அதாவது ரூ.12000 கொடுக்க வேண்டும்.

குழந்தைப்பேறு சம்பந்தமான செலவினம் இங்கு அதிகம். ஆந்திரா மாநிலத்திலிருந்து மின்துறையில், நிர்வாக அதிகாரியாக வேலை பார்த்து ஓய்வு பெற்ற, 'சதீஷ் சந்திரன்' என்பவர் அங்குள்ள நண்பர். அவர் தனது மருமகள் குழந்தைப்பேறு செலவுக்கு 4000 டாலர் கொடுத்ததாக என்னிடத்தில் குறிப்பிட்டார். இந்திய நாணயத்தின் மதிப்பு ரூ.2,00,000. "இவ்வளவு செலவு செய்தும், இங்குள்ள சிகிச்சை தனக்கு திருப்தியளிப்பதாக இல்லை" என்றார்.

தமிழ்நாட்டில் ஒரு குழந்தைப்பேறு மருத்துவமனையில் சுகப்பிரசவம் என்றால் ரூ.20,000 தான்.

சான் அன்டோனியோவில் ஃபிரெட்ரிக்ஸ்பர்க் ரோட்டில் 9969 எண்ணில் Mac Gregor என்ற மருந்தகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாலை நேரத்தில் நானும், எனது நண்பர்களும் அதன் பக்கத்திலுள்ள சிறு பூங்காவில் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். அவசர சிகிச்சைக்காக தனியாக இங்கு 20 படுக்கைகள் வைத்திருக்கிறார்கள். நோயாளிகள் வருவதும் போவதுமாக இருக்கும். இந்த மருந்தகத்திற்கு முன்னால் பல கார்களை நிறுத்தி வைத்திருப்பார்கள்.

நோயாளிகள் சிகிச்சை பெற்று மருந்தகத்திலிருந்து வந்து கார்களில் செல்வதும், காரிலிருந்து நோயாளிகள் இறங்கி மருத்துவமனைக்குச் செல்வதும் வழக்கமாக இருக்கும்.

நான் தமிழ்நாடு மருத்துவத்துறையில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் வேலை பார்த்து ஓய்வு பெற்றவன். வேலை நிமித்தமாக தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளுக்கு ஆய்வுக்காகச் சென்றிருக்கிறேன். எனவே, மருந்தகங்களின் செயல்பாடு, அதில் வேலை செய்யும் டாக்டர், நர்ஸ், பார்மசிஸ்ட், குழந்தைப் பேறு உதவியாளர், எல்லோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வேலையைப் பற்றியும் தெரியும்.

எனவே, சான் அன்டோனியோவிலுள்ள மருத்துவமனைகள் எவ்வாறு செயல்படுகின்றன? என்பதைப் பற்றி அறிய மிகுந்த ஆர்வமாய் இருந்தேன்.

"நோய் வந்தால் மருத்துவமனைக்குப் போகலாம். மருத்துவமனைக்குப் போக வேண்டும் என்பதற்காக நோயை வரவழைப்பது என்பது முடியாத காரியம்". நல்ல வேளை அங்கிருக்கும்போது எனக்கு எந்த பிரச்சனையும் வரவில்லை. அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டால், 'டாக்டர்களுக்குப் பணம் கொடுத்து முடியாது' என்று என் மகன் கூற கேட்டிருக்கிறேன். ஆனால், எப்படியும் மருத்துவமனை செயல்பாட்டினை அறிய வேண்டும் என்றும், தமிழ்நாட்டிற்குச் சென்று மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டுமென்ற ஆவல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

(தொடரும்)


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

# வா....வியாபாரி ஆகலாம்

## அமுதா B.பாலகிருஷ்ணன்

### 5.தனித்தன்மை



"ஒரு முதலாளி தன்னுடைய வியாபாரத்திற்கு மிகவும். விலையுயர்ந்த பொக்கிஷமாகக் கருதுவது தனித்தன்மை வாய்ந்த திறமையுள்ள குமாஸ்தாவைத்தான். அவனைப் போல் அவருக்குப் பலனளிக்கக் கூடியது வேறொன்றுமில்லை "என்கிறார் "கார்னீஜி"- எனும் தொழில்மேதை.

உண்மைதானே...!

தனித்தன்மையுள்ளவன் தன்னார்வம் மிக்கவனாக இருப்பான்.

தன்னுடைய முதலாளியின் நலனையே தனது நலனாக எண்ணிச் செயல்படுவான். முதலாளிக்கு அனுகூலமான, வியாபார விருத்திக்கு என்ன செய்யவேண்டும் எனும் யோசனைகளைப் பவ்யமாக எடுத்துச் சொல்வான்.

"என்ன சார்... அத இத வாங்கிப் போடுங்கன்னு சொன்னேன், நீங்க இன்னும் வாங்கியே போடலை. நான் எத்தனை வாட்டித்தான் சொல்ல முடியும்...? வாங்குனா வாங்குங்க வாங்காட்டிப் போங்க எனக்கென்ன.." ன்னு சொல்றவங்க ஒருரகம்.

"முதலாளி... அத இத நாம சீக்கிரமா வாங்கி வச்சா நமக்கு நல்லது. நான் விசாரிச்சத்துல, அந்தப் பொருள், அந்தக் கம்பெனியில விலை குறைவா இருக்கு, தரமும் நல்லா இருக்கு.... நீங்க ஒரு தடவை பாத்தீங்கன்னா உங்களுக்கு புடிக்கும்னு நினைக்கிறேன்"-னு சொல்றது ஒருரகம்.

இந்த இரண்டாவது ரகமாத்தான் நாம இருக்கணும்.

அதைத்தான் "நயம் பட உரை" என்கிறார் ஔவையார்.

இது பொருளுக்கு மட்டும் தான் என்றில்லை... எந்த ஒரு தகவலானாலும் சரி, ஒரு விஷயமானாலும் சரி, எல்லாவற்றையுமே திரும்பத் திரும்ப நினைவூட்டி, நயம்பட சொல்லிச் சொல்லி செயல்படுத்த வேண்டும்...

அது மட்டுமல்ல... "நாம இதமா பதமாத்தான சொல்றோம். எப்ப சொன்னா என்ன"ன்னு கண்ட போதும் சொல்லக்கூடாது.

இடம் பொருள் ஏவல்"-னு பெரியவங்க சொல்லி வைச்சிருங்காங்கல்ல, அந்தமாதிரி சந்தர்ப்பம் சூழ்நிலை தெரிஞ்சி சொல்லணும்.

ஏடாகூடமான நேரத்துல, சொன்னோம்னா நல்லதையேச் சொன்னால்கூட, "ஏ... போ.... அதெல்லாம் ஒண்ணும் வேணாம் போ"-ன்னு அவர் சொல்ல, சொல்ல வந்த நமக்கு "மூட்" அவுட்டாகிவிடும்.

அப்புறம் அவரிடம் எதுவும் எடுத்துச் சொல்ல மனம் வராது, விலகியே நிற்கத்தோணும்.

அப்படி ஒரு சூழ்நிலை உருவாகிறதுக்கு நாம காரணமா அமைஞ்சிறக் கூடாது.

தனித்தன்மைங்கிறது என்ன...?

வேலையை மட்டும் சும்மா சுறுசுறுப்பா பார்க்கிறது தானா...? அல்ல....

அதற்கும் மேலே, அறிவுபூர்வமாகவும் சிந்தித்து செயல்படணும்.

"எந்தப் பொருளை வாங்கி ஸ்டாக் பண்ணணும், எதை அப்பப்போ வாங்கினாப் போதும், எதை வாங்க வேண்டாம்"-னு மார்க்கட் நிலவரங்களையும் தெரிஞ்சு அதை அப்பப்ப முதலாளிகிட்ட எடுத்துச் சொல்லணும்.

"திறன் அறிந்து சொல்லுக சொல்லை"- என்கிறார் திருவள்ளுவர்.

"நமக்கு போட்டியான நிறுவனங்கள் எவை, எங்கெங்கு, என்ன பொருளை, என்னென்ன விலைக்கு விக்கிறாங்க"-ங் கிறதையும் முதலாளி சொல்லாமலேயே, நாமாக, அறிந்து, தெரிந்து சொல்லி, இது இத இப்படிச் செய்தால் நல்லாயிருக்கும்னு, சொல்லணும்.

மார்க்கெட்டை அறிந்தவனால்தான், மார்க்கெட்டைத் தாங்கி பிடிக்க முடியும்!

"நம்ம ஏரியாவுள, நாம விற்கிற பொருளை, யார் யார் வைச்சிருங்காங்க, என்னவிலைக்கு விற்கிறாங்க"ன்னு ரூட் எடுத்து, (வண்டிக்காரன் மூலமாகவோ, வாடிக்கையாளர் மூலமாகவோ) எப்படியும் உஷார் நிலையில் தெரிஞ்சு வைச்சிருக்கணும்.

ஹோல்சேல் (மொத்த விற்பனை) மார்கெட்டைப் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

நம்மைச் சுற்றியுள்ள ஏரியாவில் உள்ள ஸ்தாபனங்களைத்தாம் நாம் போட்டியாளர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதில்தான் நாம் எதிர்நீச்சல் போட்டு வெற்றி அடைய வேண்டும்.

இரண்டு பேர் காட்டு வழியே போய்க் கொண்டிருந்தார்கள்.

நடுக்காடு...

தூரத்தில் ஒரு சிங்கம் இவர்களை நோக்கி வருவதை இருவருமே கவனித்தனர்.

என்ன செய்வதென்று திகைத்தனர்.

ஒருவன் அவசர அவசரமாகத் தான் போட்டிருந்த செருப்பைக் கழற்றி விட்டு, தன்னிடமிருந்த கான்வாஸ் ஷீவை மின்னல் வேகத்தில் போட ஆரம்பித்தான் என்ன தான் முயற்சி செய்தாலும், சிங்கத்திடமிருந்து தப்பிக்க முடியாதுன்னு நினைத்த மற்றவன் இவனைப் பார்த்து, "கான்வாஸ் ஷீவை மாட்டிக் கொண்டால் மட்டும், உன்னால் சிங்கத்தைவிட வேகமாக ஓடிவிட முடியுமா?ன்னு கேட்டான்.

"என்னுடைய நோக்கம் சிங்கத்தைவிட வேகமாக ஓடுவது அல்ல, உன்னைவிட வேகமாக ஓடுவதுதான், ன்னு சொல்லி ஓட ஆரம்பித்தான்.

வியாபாரத்திற்கும் இது பொருந்தும். நாம் "ஹோல் சேல்"எனும் சிங்கத்தைவிட வேகமாக ஓடவேண்டும் என்பது முக்கியமல்ல.

நம்ம ஏரியாவுள, நம்மைச் சுற்றியுள்ளவர்களை விட, வேகமாகச் செயல்படவேண்டும், வெற்றி பெற வேண்டும் என்பதுதான் முக்கியம்.

அப்படி வெற்றி பெறச் செய்வதில், நமது நிறுவனத்திற்கு நாம் முதுகெலும்பாக இருந்து, எத்தனையோ நட்சத்திரங்களுக்கு மத்தியில் எப்படி ஒரு நிலவு பளிச்சென்று தெரிகிறதோ, அதேபோல் நாமும் அந்த நிறகூனத்தில் ஒரு தனித்தன்மையுடன் பளிச்சென்று தெரியவேண்டும்.

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.

ஆகஸ்ட்
4

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.



VGP
நிறுவனர்
நாள்

தொழில் மேதை
திருமிகு
# வி ஜி பன்னீர்தாஸ்
அவர்களின்
# 91
ஆவது
# பிறந்த நாள்

Regd.No.TN/CC(S) DN/112/2021-2023
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.8.2023
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/21-23

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# ANNAI VEILANKANNI'S
## GROUP OF EDUCATIONAL INSTITUTIONS



### Courses Offered

**COLLEGE FOR WOMEN (Arts & Science)**
Affiliated to University of Madras | Accredited by NAAC

**UG Courses**

- **B.Com.**
  - General
  - Accounting & Finance
  - Computer Applications
  - Information Systems Management
  - Corporate Secretaryship
- **B.A.**
  - English Literature
- **B.B.A.**
- **B.C.A.**
- **B.Sc.**
  - Bio-Chemistry
  - Mathematics
  - Computer Science

**PG Courses**

- **M.Com.** · **MHRM** · **M.Sc.** · Comp. Science · Bio-Chemistry

**COLLEGE OF ENGINEERING**
Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

**B.E.**

- Civil • Mechanical • EEE
- ECE • Computer Science

SC / ST / SCA / BCC மாணவர்களுக்கு கல்வி மற்றும் பேருந்து கட்டணம் கிடையாது

DIRECT SECOND YEAR LATERAL ENTRY SEATS AVAILABLE

**ANNA UNIVERSITY COUNSELING CODE: 1133**

**Other Professional Courses**

- B.Ed. • D.T.Ed.
- B.Pharmacy • M.Pharmacy
- B.Sc. Nursing
- Diploma in Nursing (GNM)















**Dr. S. Devaraj**
Chairman



**Dr. D. Dev Anand**
Secretary



**Dr. D. Johny Christopher**
Director

#81, VGP Salai, West Saidapet, Chennai-600 015
**Tel.: 044-43523712, 24710820**

#33, Gandhi Road, Near Perungalathur Railway Station
Nedungundram, Chennai-127
**Tel.: 044-22794192, 22794155, 22794064**

Helpline : 9282144444 | Email : mail4avc@gmail.com | www.annaiveilankannis.com